வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 03 28.03.2022 திங்கட்கிழமை இதழ் : 113 பக்கங்கள் : 16

### ஜனாதிபதி - கூட்டமைப்பு பேச்சில்

# சர்வதேச நீதி பொறிமுறையை நீர்த்துபோகும் விதத்தில் உறுதி!

### சாடுகின்றது பங்காளி கட்சியான ரெலோ

## புதிய அரசமைப்பில் பழையவற்றை பிணைப்பது சமஷ்டி கோரிக்கையை அழிக்கும் என்றும் சாடல்!

யாழ்ப்பாணம், மார்ச் 28

**ஜனாதிபதி தலைமையிலான அரச தரப்புக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளுக்கும் இடையிலான பேச்சில் “அரசு எதிர்கொண்டிருக்கும் சர்வதேச விசாரணை மற்றும் நீதி பொறிமுறையை நீர்த்துப்போக வைக்கும் நடவடிக்கையாக சில உறுதிமொழிகளை வழங்கி இருப்பது ஆபத்தானவையாக இருக்கின்றன” என்று கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ சாடியுள்ளது.**

அத்துடன், புதிய அரசியல் யாப்புக்கான நிபுணர் குழுவின் பரிந்துரையுடன் ஏற்கனவே அரசியல் யாப்பிலுள்ள விடயங்களை பிணைப்பது என்பது எமது சமஷ்டி முறையிலான கோரிக்கையை இல்லது ஒழிப்பதாகவே முடியும். ஏற்கனவே அரசியல் யாப்பில் இருக்கின்ற, நாம் தீர்வாக ஏற்றுக்கொள்ளாத விடயங்களை, புதிய அரசியல் யாப்பில் எமது அரசியல் தீர்வாக திணிக்கும் சூழ்ச்சியாக அமைந்துவிடும் என்றும் அந்தக் கட்சியின் பேச்சாளர் கு. சுரேந்திரன் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஜனாதிபதி - கூட்டமைப்புடனான பேச்சு தொடர்பில்

15

## நாணய நிதியத்தின் அறிக்கை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்!

கொழும்பு, மார்ச் 28

இலங்கை தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக சமுர்த்தி, சுயதொழில் இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

குறித்த அறிக்கையை மதிப்பீடு செய்து அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார். சர்வதேச நாணய நிதியம், இலங்கை தொடர்பிலான தமது அறிக்கையை நேற்றுமுன்தினம் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஜனாதிபதியுடன் பேசுவதற்கு நாம் எடுத்த முடிவு சரியானதே!

### தமிழ் அரசு தலைவர் மாவை

மானிப்பாய், மார்ச் 28

ஜனாதிபதியுடன் பேச்சுக்கு செல்வது தொடர்பில் பலரும் எம்மீது விமர்சனங்களை முன்வைத்தனர். ஆனால், நாம் பேச்சுக்கு செல்லாவிட்டால், தாங்கள் பலமுறை அழைத்தும் கூட்டமைப்பு பேச்சுக்கு வரவில்லை என்றே சர்வதேசத்துக்கு சொல்வார்கள். அதனால், நாம் எடுத்த முடிவு சரியானதே - இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை

15

## ஆளும் கட்சியின் 10 எம்.பிக்கள் சுயாதீனமாக செயல்பட முடிவு?

கொழும்பு, மார்ச் 28

ஆளும் சிறீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான ஆளும் கட்சியில் 10 பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் ஆதரவை விலத்தத் தீர்மானித்துள்ளனர் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனினும், இவர்கள் உடனடியாக எதிரணியில் இணையாமல், பாராளுமன்றத்தில் சுயாதீன அணியாக செயல்படுவர் என்றும் கூறப்படுகின்றது.

அநுர பிரியதர்சன யாப்பா, சுசில் பிரேமஜயந்த, நிமல் லான்சா, பிரேம்நாத் தொலவத்த, சந்திம வீரக்கொடி உள்ளிட்ட 10 ஆளுங்கட்சி உறுப்பினர்களே இந்த முடிவை எடுத்துள்ளனர்

15

## 3500 தொன் எரிவாயுவுடன் மற்றொரு கப்பலும் வந்தது!

கொழும்பு, மார்ச் 28

ஓமானின் கடனுதவியுடன் 3500 மெற்றிக் தொன் எரிவாயு ஏற்றி வந்த கப்பல் நேற்றிரவு இலங்கையை வந்தடைந்ததாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

எரிவாயு இறக்கும் பணி நேற்று பிற்பகல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இதேவேளை, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மூடப்படும் கெரவலப்பிட்டி லிட்ரோ எரிவாயு நிலையம் நேற்று வழமை போன்று இயங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இலங்கை அரசு சகலரையும் ஏமாற்றுவதற்கு முயல்கின்றது!

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் விசனம்

புதுடில்லி, மார்ச் 28

பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் நிகழ்த்தப்படும் மீறல்களை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவருமாறு சர்வதேச சமூகம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்த நிலையில், கடந்த வாரம் பாராளுமன்றத்தில் மேலோட்டமான திருத்தங்களை நிறைவேற்றியதன் ஊடாக அனைவரையும் ஏமாற்றுவதற்கு இலங்கை அரசாங்கம் முயற்சிக்கின்றது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் விசனம் வெளியிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மிகமோசமான சரத்துக்கள் தொடர்பில் அண்மையில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள திருத்தங்களில் அவதானம் செலுத்தப்படவில்லை என்று ஐக்கிய நாடுகள் சபையின்

15



## பண்பாட்டு மையம் இன்று திறப்பு விழா

### மஹிந்த - ஜெய்சங்கர் திறந்து வைப்பர்!

யாழ்ப்பாணம், மார்ச் 28

இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியில் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணப் பண்பாட்டு மையத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கரும் இணைந்து திறந்துவைப்பர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

15

## மசகு எண்ணெயின் விலை மீள உயர்வு

நியூயோர்க், மார்ச் 28

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை மீண்டும் கடுமையாக உயர்ந்துள்ளது.

ரஷ்யாவின் எண்ணெய் மற்றும் எரிவாயு மீது மேற்கு நாடுகள் விதித்த தடை, சவூதி அரேபியாவில் உள்ள எண்ணெய்க் கிடங்கு மீதான தாக்குதல் என்பவற்றால் இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இதன்படி, பிரெண்ட் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை முறையே 120 டொலர்களாக உயர்ந்துள்ள அதேவேளை, டபிள்யூ. ரி. ஐ. மசகு எண்ணெய் விலை 114 டொலராக உயர்வடைந்துள்ளது. (ஐ)

## இன்று வருகிறார் ஜெய்சங்கர் கூட்டமைப்பினருடன் பேசுவார்!

யாழ்ப்பாணம், மார்ச் 28

இன்று திங்கட்கிழமை இலங்கை வரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சு. ஜெய்சங்கர், இன்று மாலையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சந்தித்துப் பேசுவார் என்று அறிய வருகின்றது.

பிம்ஸ்ரெக் மாநாடு நாளை கொழும்பில் ஆரம்பமாகிறது. இந்த மாநாட்டுக்காகவே இந்திய

15

## கூட்டமைப்பு - ஜனாதிபதி பேச்சு இதயசுத்தியுடன் தொடரவேண்டும்!

### நீதி அமைச்சர் சொல்கிறார்



கொழும்பு, மார்ச் 28

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுக்களை நடத்துவதற்காக வருகை தந்தமை வரவேற்கத்தக்க விடயமாகும் என்று நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

நேற்றைய தினம் இந்தப் பத்தியில் ஜனாதிபதி - கூட்டமைப்பினருக்கிடையே நடைபெற்ற பேச்சு வரவேற்கப்படவேண்டிய ஒன்று என்ற கருத்தில் எழுதியிருந்தேன்.

அதனைப் படித்துவிட்டு, ஊர்க்குருவியின் தீவிர வாசகர்களில் ஒருவர், அரசியல்வாதி மாத்திரமல்ல, சிரேஷ்ட சட்டத்தரணிகளில் ஒருவர், தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்.

“சந்திப்பின் மூலம் தமிழ் மக்களுக்கு நல்லது நடந்தால், நல்லதுதான். ஆனால், அது நடக்கும் முன்னர் இப்படி எழுதி நம்பிக்கையை வளர்க்காதீர்கள். நம்பிக்கைகள் பின்னர் தகர்ந்து கொட்டும்போது அதன் வலி இன்னும் அதிகமாகும்” என்று எச்சரித்தார்.

ஜனாதிபதி முன்னர் பாதுகாப்பு செயலாளராக இருந்த காலத்திலிருந்து அவரை அறிந்த ஒருவர், அவரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தார்.

அவர் சொன்னது, நம்பிக்கை தருவதாக இருந்தது. அதுதான் அந்த நம்பிக்கை என்று விளக்கம் தந்தேன்.

“பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபயவுக்கும் ஜனாதிபதி கோட்டாபயவுக்கும் எத்தனை வித்தியாசம். அவரின் உடல்மொழியே மாறியிருந்தது“ என்று அந்த பிரமுகர் சொல்லியிருந்தார்.

“சந்திப்பில் பல விடயங்கள் பேசப்பட்டன. சம்பந்தன் மேசையில் தட்டி பொங்கி எழுந்தார் என்று நீங்கள் மாத்திரமல்ல, எல்லா ஊடகங்களுமே வர்ணித்திருந்தனவே” என்ற அவர், எதற்காக அவர் அவ்வாறு ஆத்திரமடைந்தார் என்பதை கவனித்தீர்களா? என்று கேட்டார்.

பதின்மூன்றை முழுமையாக நடைமுறைப்படுத்த அவர் கோரியபோது, அதில் சில பிரச்னைகள் இருக்கின்றன என்று வெளிவிவகார அமைச்சர் போராசிரியர் பீரிஸ், மற்றும் நீதி அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் விளக்கமளித்தபோது அவர் கோபமடைந்தது நியாயமானதுதானே - என்றேன்.

நியாயமானதுதான், ஆனால், பொலிஸ் அதிகாரம், காணி அதிகாரம் என்பவற்றை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் இருப்பதாக அவர்கள் சொன்னபோதுதான் சம்பந்தனுக்கு கோபம் வந்திருக்கின்றது. இதில் ஏன் அவருக்கு கோபம் வந்தது?

இதை அன்றுதான் முதன்முதலாக ஆளும்தரப்பு சொன்னதா என்ன? இதைத்தானே முப்பது ஆண்டுகளுக்கும் மோலாக சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். இப்போது மட்டும் ஏன் அவருக்கு கோபம் வந்தது?

நல்லாட்சி அரசாங்கம் இருந்த காலத்தில், புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருகின்றோம் என்று ஐந்து ஆண்டுகளை காலம்கடத்திய சம்பந்தன், அப்போது- அதுவும் மைத்திரி பதவியேற்ற உடன் அந்த நூறுநாள் ஆட்சிக் காலத்திலேயே பதின்மூன்றை முழுமையாக நடைமுறைப்படுத்த அழுத்தம் கொத்திருக்கலாமே. அப்போதெல்லாம் இதனைக் கண்டுகொள்ளாத சம்பந்தன், இப்போது மாத்திரம் பொங்கி எழுவது ஏன் என்பதையுமல்லவா ஊடகங்கள் கேள்விக்கு உட்படுத்த வேண்டும் என்று அந்த சட்டத்தரணி கேட்டபோது, அதற்கு இந்த ஊர்க்குருவியிடம் பதில் இருக்கவில்லை.

அது மாத்திமரமல்ல, மேசையில் ஓங்கி தட்டி, “எங்களை நாய்கள் என்று நினைக்கிறீர்களா? அப்படியெனில் நாங்கள் தனியாகச் செல்லவேண்டிவரும்“ என்று எச்சரிக்கை விடுத்தபோது, முன்னால் இருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அதுக்கென்ன போறதெண்டால் போகவேண்டியதுதானே என்பதுபோல சம்பந்தனைப் பார்த்தது அவருக்கு புரிந்திருக்குமோ என்னவோ?

அதுசரி, அது என்ன தனியாகச் செல்லவேண்டிவரும்? அப்படியெனில் தனியாகச் செல்லக்கூடிய நிலைமை இருந்தும், அவர் அப்படி தனியாக செல்லாமல் இப்போது இருந்துகொண்டிருக்கிறாரோ? என்று கேட்டுவிட்டு அந்தச் சட்டத்தரணி விடைபெற்றார்.

விடைபெற முன்னர், அவர் கேட்டதும் நியாயமானதுதான், மிருசுவிலில் எட்டு தமிழர்களை படுகொலை செய்த இராணுவ சிப்பாயை பொதுமன்னிப்பில் விடுதலை செய்த ஜனாதிபதி, ஏற்கனவே மரண தண்டனை விதிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளில் ஒருவரையாவது உடன் பொதுமன்னிப்பில் விடுதலை செய்து தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று கூட்டமைப்பினர் கேட்டிருக்கலாமே என்று கேட்டார்.

**- ஊர்க்குருவி**

# தமிழகம் வரும் அகதிகளுக்கு முதலமைச்சர் உதவ வேண்டும்!

## செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை

மன்னார், மார்ச் 28

இலங்கையில் வாழ முடியாதென்று இந்தியா செல்லும் உறவுகள் தொடர்பில் ஈழ அகதிகளுக்கு உதவுமாறு தமிழ்நாடு முதலமைச்சரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் வாழ முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. இதன் காரணமாகவே மக்களுடைய தொழில்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பிள்ளைகளுக்கு சரியான முறையில் உணவு கொடுக்க முடியவில்லை. அவ்வாறான ஒரு பிரச்னை நாட்டிலே தொடர்ந்து கொண்டிருக்கின் றது.

ஒவ்வொரு நிமிடமும் உணவு பொருட்களின் விலை உயர்வடைவதனால் அன்றாடம் உழைக்கின்றவர்கள் பட்டினியை எதிர் கொள்கின்ற நிலை உருவாகி இருக்கின்றது. அதனால் இந்தியா செல்கின்ற ஒரு சூழல் ஏற்பட்டிருக்கின்றது. அது தவிர்க்க முடியாதது என்றே கூறுகின்றேன். ஏனென்றால் குழந்தைகளுக்கு உணவு கொடுக்கவில்லை என்றால் தாய், தந்தை அடுத்த கட்டம் என்ன செய்வது என்று தான் யோசிப்பார்கள்.

ஆகவே இலங்கையில் பட்டினியால் இறப்பதை விட இந்தியா செல்வது சட்டவிரோத செயற்பாடாக இருந்தாலும் கூட, அவ்வாறான ஒரு செயற்பாட்டை மக்கள் செய்வது அந்த காரணங்களை வைத்து கொண்டு தான். எனவே இந்திய அரசாங்கம் அங்கே வருபவர்களை முகாம்களில் விட்டிருக்கின்றனர் என்று அறிகின்றேன். அந்தவகையில் முதலமைச்சருக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன்.

இலங்கையில் வாழமுடியாதென்று இந்தியா வரும் உறவுகளை நீதிமன்றத்தினை அணுக வைத்து சிறப்பு முகாம்களில் அடைக்காது, மக்கள் தங்கியிருக்கின்ற முகாம்களில் தங்க வைக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் நான் முதலமைச்சரிடம் முன் வைக்கின்றேன் - என்றார். (ஐ)

## வேதபாராயணமும் அருளாசி உரையும்!

கிளிநொச்சி, மார்ச் 28

கொரோனா தொற்றிலிருந்து உலகம் விடுபடவும் சகல மக்களும் அனைத்து நோய்களிலிருந்தும் விடுபடவும் வேண்டி நடக்கும் வேதபாராயண பிரார்த்தனை மற்றும் அருளாசியுரை நாளை செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதில், கிளிநொச்சி - வன்னேரிக்குளம் ஆனைவிழுந்தான் முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ பாலசஜீவகுருக்கள் அருளாசி உரையை நிகழ்த்துவதுடன் வேதபாராயணத்தையும் நிகழ்த்துவார்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடியாக ஒலிபரப்பாகும். (ஐ)



## சர்வதேச புவி தினத்தில் 10,000 விளக்குள் ஒளிர்ந்தன

கிளிநொச்சி, மார்ச் 28

சர்வதேச புவி தினமான நேற்று முன்தினம் சனிக்கிழமை 10 ஆயிரம் விளக்குகள் ஏற்றும் விசேட நிகழ்வு ஒன்று கிளிநொச்சியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு விடியல் ஆடை தொழிற்சாலையின் ஏற்பாட்டில் கிளிநொச்சி பசுமை பூங்காவில் இடம்பெற்றது.

புவி மணித்தியாலமான இரவு 8.30 - 9.30 மணி வரையான காலப்பகுதியில் அனைத்து மின்விளக்குகளும் அணைக்கப்பட்டு புவிக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்வில் சர்வமத தலைவர்கள், கரைச்சி பிரதேச சபை தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதன் போது 10ஆயிரம் சிட்டி விளக்குகள் ஏற்றப்பட்டு அப்பகுதி அழகாக காட்சியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கடமை தவறிய ஊழியர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்!

## கல்முனை சுகாதார சேவை பணிப்பாளர்

மட்டக்களப்பு, மார்ச் 28

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்கு உட்பட்ட வைத்தியசாலைகளில் கடமை நேரத்தில் வைத்தியசாலைகளில் இல்லாத உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஐ. எல். எம். றிபாஸ், நேற்று தெரிவித்தார்.

மாவட்ட மற்றும் பிரதேச வைத்தியசாலைகளில் கடமை நேரத்தில் அங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் இருப்பதில்லையென பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுவதாகவும் தெரிவித்தார்.

இந்த முறைப்பாடுகளுக்கு அமைய, சுகாதார அதிகாரிகள் குழுவினால் திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார் .

இதற்கமைய மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது இரண்டு வைத்தியசாலைகளில் கடமை நேரத்தில் இல்லாத உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, இடமாற்றம் மற்றும் பதவிக் குறைப்பு கடிதமும் அவ்விடத்திலேயே வழங்கப்பட்டுவருவதாகவும் தெரிவித்தார் .

வைத்தியசாலையில் கடமை நேரத்தில் இல்லாத உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் தொடர்பாக பொதுமக்கள் வைத்தியசாலைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள விரைவுத் தகவல் குறியீடு (கியூ. ஆர்) ஊடாகவும், எழுத்து மூலம் அல்லது வாய்மொழி மூலமாகவோ பிராந்திய சுகாதார சேவைகள் நிலையத்துக்கு உடனடியாக அறிவிக்குமாறு கேட்டுள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
28.03.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், பங்குனி 14

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# ஜெய்சங்கரின் வருகை

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர் - பிம்ஸ்ரெக் (BIMSTEC) மகாநாட்டில் பங்குகொள்வதற்காக இலங்கை வரவுள்ளார். அவரின் விஜயம் உறுதிசெய்யப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன. ஆரம்பத்தில் பிரதமர் மோடி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளாரெனக் கூறப்பட்ட போதிலும்கூட, அது பின்னர் கைவிடப்பட்டது. இந்த நிலையில், ஜெய்சங்கர் - தமிழ் தேசிய கூட்டமைப்பை சந்திப்பாரென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆறு தமிழ்க் கட்சிகள், அண்மையில் இந்திய பிரதமரின் தலையீட்டைக் கோரி, கடிதமொன்றை அனுப்பியிருந்தன. இந்த கடிதத்திற்கு இதுரையில் புதுடில்லியிலிருந்து, எந்தவொரு பதிலும் வரவில்லை. இந்தக் கடிதம், இந்தியாவை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஒரு கூட்டு அணுகுமுறையாக இருந்தபோதிலும்கூட, அதற்கு இந்தியாவின் பதில் என்ன என்பதில் தெளிவில்லை. ஒருவேளை கூட்டமைப்பை ஜெய்சங்கர் சந்தித்தால், இது தொடர்பில் அவர் ஏதேனும் கூறுவதற்கு வாய்ப்புண்டு.

ஒருவேளை இந்தக் கடிதம் தொடர்பில் அவர் எதனையும் கூறாதுவிட்டால், புதுடில்லி தமிழ் கட்சிகளின் கூட்டு கடிதத்தை பெரிது படுத்தவில்லையா என்னும் கேள்வி எழலாம். அதேவேளை, இந்திய பிரதமர் நரேந்திர மோடி - இலங்கைக்கு விஜயம் செய்தால், கடிதத்தில் கையெழுத்திட்ட ஆறு கட்சிகளையும் அவர் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்னும் கோரிக்கை சிலரால் முன்வைக்கப்பட்டிருந்தது. ஆனால், அதற்கு கூட்டமைப்பு, முக்கியமாக, சம்பந்தன் இணங்குவரா என்பதில் சந்தேகங்கள் உண்டு. ஒருவேளை இந்தியத் தரப்பிலிருந்தே அவ்வாறான கோரிக்கை முன்வைக்கப்பட்டால், ஆறு கட்சிகளும் ஒரே மேசையில் சந்திக்க முடியும். அவ்வாறான வாய்ப்பு ஒன்றை ஜெய்சங்கர் வழங்குவாரா?

இந்திய பிரதமரின் தலையீட்டை கோரிய கடிதத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று கருதினால், ஜெய்சங்கர் ஆறு கட்சிகளையும் நிச்சயம் சந்திப்பார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முக்கியமாக, இந்த கடிதம் அனுப்பும் ஏற்பாட்டை நெறிப்படுத்தியிருந்த ரெலோ, இது தொடர்பில் இந்திய தூதரகத்தை அணுக வேண்டும். ஆறு கட்சிகளையும் ஒரே மேசையில் சந்திப்பதற்கு சந்தர்ப்பம் தருமாறு கோர வேண்டும். அது ரெலோவின் பொறுப்பும்கூட. ஒருவேளை கூட்டமைப்பின் பக்கத்தில் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்படாவிட்டால், விக்னேஸ்வரன் தலைமையிலான அணியினர், இந்திய வெளிவிவகார அமைச்சரை சந்திப்பதற்கான தனியான நேரத்தை வழங்குமாறு இந்திய தூதரகத்தை கோரலாம்.

ஜெய்சங்கருடனான முன்னைய சந்திப்புக்களின்போதும், 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. ஆனால், இதுவரையில் கொழும்பு எந்தவோர் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை. அதற்கு மாறாக, 13ஆவது திருத்தச் சட்டத்தில் சில சிக்கல்கள் உண்டு என்றவாறே இப்போதும் பதிலளிக்க முற்படுகின்றது. சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற ஜனாதிபதி - கூட்டமைப்பு சந்திப்பின்போதும், இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் அப்படித்தான் கூறியிருக்கின்றார்.

13ஆவது திருத்தச் சட்டத்திலேயே சிக்கலிருந்தால் - அதற்கும் மேல் சென்று, எவ்வாறு அரசியல் தீர்வை காண்பது? ஏனெனில், 13ஆவது திருத்தச்சட்டம் குறைபாடுடையது, அதனை ஒரு நிறைவான அரசியல் தீர்வாக ஏற்றுக்கொள்ள முடியாதென்பதே, தமிழ் அரசியல் சமூகத்தின் நிலைப்பாடாக இருக்கின்றது. இந்த நிலையில், 13ஆவது திருத்தத்திலேயே, சிக்கல் இருக்கிறதென்றால், அதற்கு மேல் எவ்வாறு நகர்வது? இந்த விடயங்களின் அடிப்படையில், தமிழர் தரப்புக்கள் ஜெய்சங்கருடன் பேச வேண்டும். இப்படியே எவ்வளவு காலத்திற்கு பேசிக் கொண்டிருப்பது? - இந்தியா இந்த விடயத்தில் - அதாவது, 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தும் விடயத்தில் என்ன செய்யப் போகின்றது? இந்த அடிப்படையில் இந்த சந்திப்பை கூட்டமைப்பு பயன் படுத்திக் கொள்ள வேண்டும்.

# சம்பந்தரின் ஆவேசத்துடன் கூடிய சுவிஸ் கனவு !

**அலசுவது இராஜதந்திரி**

*அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்ட அமுலாக்கம் குறித்து நேற்று முன்தினம் இடம்பெற்ற அரச தரப்பினருடனான பேச்சுக்களின்போது வெளிப்படுத்தப் பட்ட அசமந்தப்போக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர் இரா. சம்பந்தனை ஆத்திரமடைய வைத்திருந்தது. இதன்காரணமாக தன் முன்னாலிருந்த மேசைமீது சம்பந்தன் தனது கரத்தால் பலமாக அடித்திருந்தார்.*

*இரா.சம்பந்தன் ஆத்திரத்தினால் மேசை மீது அடித்தார் என்று கூறுவதைவிட 13ஆவது திருத்தச்சட்ட அமுலாக்கம் குறித்து தமிழ் அரசியல் தரப்பு எவ்வளவு தூரம் உறுதியாக இருக்கின்றது என்பதையே சம்பந்தரின் செய்கை எடுத்துக்காட்டியிருந்தது.*

*உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் அவதானிகளின் கவனத்தை ஈர்த்ததாக தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் இலங்கை அரச தரப்புக்குமிடையிலான பேச்சு இடம்பெற்றிருந்தது. நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற பேச்சுக்களை கூர்ந்து நோக்கும்போது வடக்கு - கிழக்கு தமிழர்களின் அரசியல் தீர்வுக்காக இதய சுத்தியுடன் அரசு தமிழ் தரப்பை சந்திக்க முன்வந்திருந்ததா? அல்லது தற்போதைய இக்கட்டான பொருளாதார நிலவரத்திலிருந்தும் மீளும் விதத்தில் புலம்பெயர்ந்த தமிழர்களின் உதவியை பெறும் விதத்தில் நடத்தப்பட்ட ஒரு கபட நாடகமா இந்தச் சந்திப்பு எனவும் எண்ணத்தோன்றுகின்றது.*

*உலகிலேயே பெருமளவு கடனாளியாகிப் போயுள்ள நாடு என்ற நிலையில் இலங்கை இருக்கின்றது. சர்வதேச நாணய நிதியமும் தற்போது கடன்களை பெறுவது குறித்து இலங்கைக்கு எச்சரிக்கை செய்துள்ளது.*

*சர்வதேச நாணய நிதியம் விடுத்துள்ள எச்சரிக்கையில் ஏராளமான தொகையில் இலங்கை கடன் பெறும்போது பெறப்படுகின்ற கடன்தொகையை மீளச்செலுத்தக் கூடிய விதத்தில் இலங்கையிடம் பண இருப்பு இருக்கவேண்டும். இல்லையேல் இலங்கை ஒரு பெரும் வங்குரோத்து நிலைக்கே தள்ளப்பட்டுவிடும் என்று சர்வதேச நாணய நிதியம் தனது 94 பக்க அறிக்கையில் எச்சரித்துள்ளது.*

*சர்வதேச நாணய நிதியத்தின் இந்த எச்சரிக்கை காலமறிந்ததாகவே இருக்கின்றது. இத்தகைய பின்னணியிலேயே தமிழ் தேசிய கூட்டமைப்புடனான பேச்சில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான தரப்பினர் நேற்று முன்தினம் பங்கு பற்றியிருந்தனர்.*

*அரச தரப்புடனான பேச்சுகளின்போது இராணுவத்தினருக்கு வடக்கு - கிழக்கில் காணிகள் சுவீகரிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமலாக்கப்பட்டோர் விடயத்திற்கு முக்கியமளித்தல் போன்றவை தமிழ் தரப்பினால் அரசின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டிருந்தது.*

*அச்சமயம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபகஷ ஆயுதப் படையினருக்கு காணிகள் தேவைப்படுகின்றனவா? என்று வியப்போடு கேள்வி எழுப்பியிருந்தமை அவர் உண்மையிலேயே வடக்கு - கிழக்கிலுள்ள சர்ச்சைக்குரிய விடயங்கள் குறித்து எதுவும் தெரியாதவராக இருந்து வருகின்றாரோ என்று எண்ண வைப்பதாகவே அமைந்திருந்தது.*

*வடக்கு - கிழக்கில் பல்வேறு இடங்களிலும் சிறிதும் பெரிதுமாக காணிகள் படையினரின் பாவனைக்காக யுத்தம் முடிந்த நாள் முதல் எடுக்கப்பட்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது. இந்நிலையில் ஜனாதிபதி காணி அபகரிப்பு குறித்து எதுவும் தெரியாதது போல நடந்த கொண்டமை அவர் பாசாங்கு செய்கின்றாரோ எனவும் எண்ண வைத்திருந்தது.*

*வடக்கு - கிழக்கின் அடிப்படை பிரச்னைகளையே மிக ஆழமாகவும் அதேசமயம் ஒரு தூர நோக்கோடும் இரா. சம்பந்தன் ஜனாதிபதியிடம் எடுத்துக்கூறியமை ஒரு பரந்துபட்ட அரசியல் தீர்வில் தமிழ்த் தேசிய கூட்டடைப்புக்கு உள்ள நாட்டத்தையே தெளிவு படுத்தியிருந்தது.*


*வடக்கு - கிழக்கிற்கான அரசியல் தீர்வை ஏற்படுத்தக்கூடியதாக 13ஆவது திருத்தச் சட்டம் 1987ஆம் ஆண்டிலிருந்தே இருந்து வருகின்றது. எனவே, இத்திருத்தச்சட்டத்தை அமுலாக்குவதன் மூலமே ஓர் அர்த்தமுள்ள தீர்வைப் பெற முடிவதோடு இலங்கையையும் சுவிற்சர்லாந்தைபோல ஓர் உன்னதமான நாடாக முடியும் எனவும் தாம் அடைந்த ஆவேசத்துக்கு மத்தியில் இரா. சம்பந்தன் கூறியிருந்தார்.*

*சுவிற்சர்லாந்து இயற்கை வளங்களால் மட்டுமல்ல. அங்குள்ள பன்முகப்படுத்தப் பட்ட அதிகாரப் பரவலாக்கம் மூலமாகவும் மக்கள் சகல உரிமைகளையும் சமத்துவமாகப் பெற்று அழகுற அமைதியோடு வாழ்கின்றனர்.*

*இலங்கையை சிங்கப்பூரை ஒத்த நாடாக மாற்றுவதே தமது கனவு என்று கடந்த கால ஆட்சியாளர்கள் குறிப்பிட்டு வந்தனர். ஆனால், சிறிய சிங்கப்பூர் தலைவர்களின் அரசியல் ஆளுமை, பொருளாதார ரீதியான தூரநோக்கு என்பவற்றுக்கு எவ்வகையிலும் ஈடுகொடுக்க முடியாதவர்களாகவே இலங்கை அரசியல் தலைமைத்துவங்கள் இருக்கின்றன.*

*இந்த நிலையில் சம்பந்தர் குறிப்பிட்ட சுவிற்சர்லாந்துபோலவோ அல்லது சிங்கப்பூர் போலவோ இலங்கை இருக்க வேண்டிய அவசியமில்லை. இலங்கையின் பிரதான பிரச்னையான வடக்கு - கிழக்கு விவகாரம் சுமுகமாக தீர்க்கப்படும் பட்சத்தில் மாண்புடனும் பொருளாதார அபிவிருத்தியுடனும் இலங்கை ஓர் அழகிய இலங்கையாகவே இருக்கமுடியும்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு



பங்குனி - 28 திங்கட்கிழமை
பிலவ வருடம் - பங்குனி 14
நல்ல நேரம் : 6.00 - 7.30
ராகு காலம் : 7.30 - 9.00
திதி : ஏகாதசி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைப்பதால் மகிழ்வீர்கள். குழந்தைகளால் பெருமை சேரும். ஆன்மிக ஈடுபாடு அதிகரிக்கும். உறவினர் வகையில் எதிர்பாராத நன்மைகள் ஏற்படும்.

**இடபம்**
கனிவாகப் பேசுவீர்கள். நண்பர்கள் ஆலோசனை தருவர். வருமானம் போதுமானதாக இருக்கும். கலகலப்பான நாள். உறவுகளையும், நட்பையும் தக்க வைத்துக்கொள்ளுங்கள்.

**மிதுனம்**
பேச்சினால் யாரையும் பகைத்துக் கொள்ள வேண்டாம். நேர்மையற்ற நபர்களின் தொடர்பை துண்டிப்பீர்கள். புறம் பேசியவர்கள் உங்களை விட்டு விலகுவர்.

**கடகம்**
உங்களின் புகழ் கூடும். திறமையாக செயல்படுவீர்கள். பொறுமையுடன் ஒரு செயலில் ஈடுபட்டு வெற்றி அடைவீர்கள். வீடு வாங்கும் முயற்சிகள் வெற்றி பெறும். தெய்வ பலம் அதிகரிக்கும்.

**சிம்மம்**
மற்றவர்கள் உங்களைப் பாராட்டிப் பேசுவர். கவலை நீங்கும். அரசுப்பணியாளர்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சிக்குக் குறைவு இருக்காது.

**கன்னி**
பணியாளர்களுக்கு திறமைக்கேற்ற பொறுப்பு கிடைக்கும். பெரியோரை பகைத்துக்கொள்ளாதீர்கள். அதுவே உங்களுக்கு நல்லது. தைரியம் தன்னம்பிக்கை அதிகரிக்கும். மகிழ்ச்சி ஏற்படும்.

**துலாம்**
பணியில் இருந்து வந்த சிறு சிறு நெருக்கடிகள் நீங்கும். பணியாளர்கள் வீண் முயற்சிகளை தவிர்ப்பது நல்லது. கலைத்திறமையை வெளிக்காட்டி பிறரை வியக்க வைப்பீர்கள்.

**விருட்சிகம்**
உடல் ஆரோக்கியத்தில் இருந்த பிரச்னைகள் நீங்கும். உங்களின் திறமை அதிகரிக்கும். நல்ல வேலை கிடைக்கும். குடும்பத்தினர் இடையே புரிதல் ஏற்படும். மகிழ்ச்சி கூடும்.

**தனுசு**
பணிகளில் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நாள். இன்று எந்தவொரு விஷயம் செய்வதாக இருந்தாலும் கவனம் தேவை. கூடா நட்பால் மனக் கலக்கம், கற்பனை பயம் ஏற்படலாம்.

**மகரம்**
சாப்பிட, தூாங்க நேரமின்றி கூடுதலாக உழைப்பீர்கள். எதையும் பொறுமையோடு சமாளிப்பீர்கள். மனதைரியம் கூடும். கலகலப்பு அதிகரிக்கும். உதவி செய்து பிறரை மகிழ்விப்பீர்கள்.

**கும்பம்**
தாயின் உடல் ஆரோக்கியத்தில் எச்சரிக்கை தேவை. பணியிடத்தில் தேவையற்ற வாக்கு வாதத்தைத் தவிர்க்க வேண்டும். நல்ல செய்தி தேடிவரும். உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும்.

**மீனம்**
உங்கள் செயல்பாடுகளில் வெற்றி கிடைக்கும். மகிழ்ச்சி கூடும். எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். நிம்மதி கிடைக்கும் நாள். திறமை அதிகரிப்பதால் எடுத்த முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

# இலங்கையில் இருந்து அகதிகள் குமரியில் தீவிர கண்காணிப்பு!

சென்னை, மார்ச் 28

இலங்கையில் இருந்து தமிழகத்துக்கு அகதிகள் வருகை அதிகரித்துள்ளதால் குமரி மாவட்டத்தில் உள்ள இலங்கை அகதிகள் முகாம்களில் கியூ பிரிவு பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள். கடற்பகுதியிலும் கண்காணிப்பு தீவிரப்படுத்தப் பட்டுள்ளது,



கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் தவித்து வரும் மக்கள் கடல் வழியாக தமிழகத்துக்கு அகதிகளாக வரத் தொடங்கி உள்ளனர். அவ்வாறு அகதிகளாக வந்தவர்களிடம் கியூ பிரிவு பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இதுபோல் கடல்வழியாக இலங்கை அகதிகள் பலரும் குமரி மாவட்டத்துக்கு வரலாம் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இதனால், கடற்கரை பகுதிகளில் கடலோரப் பாதுகாப்பு படை மற்றும் கியூ பிரிவு பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். குமரி மாவட்டத்தில் கோழிப்போர்விளை, பழவிளை, பெருமாள்புரம் மற்றும் ஞாறான்விளை ஆகிய பகுதிகளில் இலங்கை அகதிகள் முகாம்கள் செயல்பட்டு வருகிறது. இவற்றில் புதிதாக யாராவது வந்துள்ளார்களா என பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர்.

மேலும் அரசின் அனுமதி பெற்று வெளியே வீடுகளில் தங்கியுள்ளவர்கள் மற்றும் குடியுரிமை பெற்றவர்கள் வீடுகளையும் கியூ பிரிவு பொலிஸார் கண்காணித்து வருகின்றனர்.

# மீனவர்களை மீட்கக்கோரி ஆர்ப்பாட்டம்

இராமநாதபுரம், மார்ச் 28

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட 16 தமிழக மீனவர்களை மீட்கக்கோரி இராமேஸ்வரத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கடந்த 23 ஆம் தேதி எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இராமேஸ்வரம் மற்றும் மண்டபம் பகுதிகளைச் சேர்ந்த 16 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்தனர். மேலும் அவர்களது படகுகளையும் பறிமுதல் செய்து மீனவர்களை இலங்கை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தி, பின்னர் சிறையில் அடைத்தனர்.

இந்த நிலையில் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை மீட்கக்கோரி ராமேஸ்வரம் மீனவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இதில் இன்று கைக்குழந்தைகளுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்கள், இலங்கை சிறையில் உள்ள மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்தனர்.

# தி.மு.கவின் அச்சுறுத்தல்களை நீதிமன்றத்தில் சந்திக்க தயார்

## சவால் விடுக்கிறார் அண்ணாமலை

சென்னை, மார்ச் 28

நீதித்துறை மீது தனக்கு முழு நம்பிக்கை உள்ளதாக பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

டுபாய் சர்வதேச கண்காட்சியில் தமிழ்நாடு அரங்கை திறந்து வைப்பதற்காகவும், தமிழகத்திற்கு அதிக தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காகவும், அரசு முறைப்பயணமாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் டுபாய் சென்றுள்ளார்.

இந்த நிலையில் முதலமைச்சரின் டுபாய் பயணம் குறித்து தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை அடிப்படை ஆதாரம் இல்லாமால் அவதூறு பரப்பியதாகவும், அதற்காக அவர் முதலமைச்சரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று தி.மு.க. சார்பில் அவருக்கு சட்டத்தரணி மூலும் கடிதம் அனுப்பப் பட்டுள்ளது. ஸ்டாலின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் அண்ணாமலை பேசியிருப்பதாகவும், அவர் நஷ்ட ஈடாக ரூ.100 கோடி முதல்வர் நிவாரண நிதிக்கு வழங்க வேண்டும் என்றும் திமுக சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு பாஜக மாநில தலைவர் அண்ணாமலை தனது ருவிட்டர் பக்கத்தில் பதிலளித்துள்ளார். அந்த பதிவில் அவர் கூறியுள்ளதாவது;

“100 கோடி ரூபாய் இழப்பீடு கேட்டு திமுக கட்சி, என் மீது, மானநஷ்ட வழக்கு அனுப்பி இருப்பதை அறிந்தேன். தி.மு.க.வின் முதன்மை குடும்பம், சாதாரண சாமானியனான என்னையும், அவர்களைப் போன்ற டுபாய் குடும்பத்துக்கு, சரிசமமாக நடத்துகிறது. நம் நாட்டின் நீதித்துறை மீது எனக்கு முழு நம்பிக்கை உள்ளது. திமுகவின் அச்சுறுத்தல்களை எல்லாம் நீதிமன்றத்தில் சந்திப்பேன். தமிழகத்துக்கான, என் போராட்டம் தொடரும்“ என அவர் பதிவிட்டுள்ளார்.

# தமிழகம் வளர்ந்த மாநிலம் என்ற நிதி அமைச்சர் அறிவிப்பு தவறு

## மக்கள் நீதி மய்யம் கட்சி கருத்து

சென்னை, மார்ச் 28

உண்மையான தமிழகத்தைத் தெரிந்து கொள்ள கிராமப்புறங்களுக்குச் சென்றால்தான் ரூ.100 கூலிக்கு எத்தனை பேர் காத்திருக்கிறார்கள் என்பது போன்ற உண்மைகள் நமக்குப் புரியும் என மக்கள் நீதி மய்யம் துணைத் தலைவர் மவுரியா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

“சட்டப்பேரவையில் நிதி நிலை அறிக்கை மீதான பொது விவாதத்துக்கு பதில் உரை வழங்கிய நிதி அமைச்சர், தமிழகம் ஏழை மாநிலம் அல்ல, வளர்ந்த மாநிலம் என்பதையே பல்வேறு ஆய்வுகள் காட்டுவதாகத் தெரிவித்தார்.

உயர்கல்வி படிப்பவர்கள், வீடு, கைத்தொலைபேசி மற்றும் இருசக்கர வாகனம் வைத்திருப்போர் எண்ணிக்கையைக் கொண்டு ஒரு மாநிலம் வளர்ந்த மாநிலமா, ஏழை மாநிலமா என்று முடிவுக்கு வர முடியுமா? என்ற கேள்வி நமக்குள் இயல்பாக எழுகிறது.

உண்மையான தமிழகத்தைத் தெரிந்து கொள்ள கிராமப்புறங்களுக்குச் சென்றால்தான் ரூ.100 கூலிக்கு எத்தனை பேர் காத்திருக்கிறார்கள் என்பது போன்ற உண்மைகள் நமக்குப் புரியும்.

தமிழகத்தை வளர்ந்த மாநிலம் என்று சொல்வதன் மூலம், தேர்தல்அறிக்கையின் மகளிர் உரிமைத் தொகை ரூ.1,000 என்ற அறிவிப்பை செயல்படுத்தாமல் விட்டுவிடலாம் என்ற எண்ணம் இருப்பதாகவே தோன்றுகிறது“ இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## தாழ்ச்சியே உயர்வு



அரச அலுவலர் ஆண்டவர் இயேசு மேல் கொண்ட ஆழமான விசுவாசத்தைப் பற்றியே இன்றைய நற்செய்தி அமைந்துள்ளது. தன் மகனுக்கு உயர்ப் பிச்சை கேட்டு வந்தவனோ அரச மாளிகையில் உயர் பதவியிருந் தவன். அவன் தேடி வந்தவரோ ஒரு சாதாரண தச்சனின் மகன். அலுவல ரது ஊருக்கும், தச்சனின் மகன் இருந்த ஊருக்கும் ஏறத்தாழ 20 தொலைவு.

மக்களுக்கும், அரசனுக்கும் அவையில் இருப்பவர்களும் என்ன எண்ணுவார்கள் என்று அவன் நினைக்கவில்லை. மாறாக தாழ்ந்த உள்ளத்துடன் தன் பதவியில் இருப்பு நிலையையும் விட்டு விசுவாசத்தோடு ஆண்டவர் இயேசுவிடம் வருகின்றான். அவனுடைய தாழ்ச்சி, விசுவாசம் அவனுடைய மகனுக்கு உயிர் கொடுத்தது.

நமக்குக் கிடைக்கும் அதிகாரங்கள், பதவிகள் பெரும்பாலும் நமக்குத் தலைக்கணத்தைத் தான் தந்து விடுகின்றன. பதவி என்பது பணி புரிவதற்கே பிற மனிதர்களுக்கும் இறைவனுக்கும் தலை குனிய, பணி புரிய மறுக்கின்றோம்.

இத் தவத்திலாவது நாம் தாழ்ச்சியுள்ளவர்களாக இறை விசுவாசமுள்ளவர்களாக வாழ முயலுவோம்.

**அருட்பணி ம.ஜோண் பொஸ்கோ செ.தா.**



# போக்குவரத்து வசதிகளின்றி தட்டுவன்கொட்டி மக்கள் சிரமம்!

*கிளிநொச்சி, மார்ச் 28*

கிளிநொச்சி - கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள தட்டுவன்கொட்டி பிரதேசத்தில் 117 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இந்த நிலையில் அவர்கள், போக்குவரத்து வசதியின்மை மற்றும் அடிப்படை வசதிகள் இன்மையால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது

இந்த மக்களின் பிரதான தொழிலாக மீன்பிடி மற்றும் விவசாயம் என்பன காணப்படுகின்றன.

அந்தக் கிராமத்தில் உள்ள பாடசாலை தரம் 11 வரையான வகுப்புகளை மாத்திரம் கொண்டிருந்த போதும் ஏனைய மாணவர்கள், உயர் கல்விக்காக பரந்தன் மற்றும் கிளிநொச்சி பாடசாலைகளுக்கு செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

அத்தோடு, வைத்தியத் தேவைகள் மற்றும் ஏனைய அத்தியாவசிய தேவைகளுக்கும் 20 கிலோமீற்றர் தூரம் பயணித்து கிளிநொச்சி, பரந்தன் ஆகிய இடங்களுக்கே செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

போக்குவரத்து வசதிகள் எதுவும் இல்லாத நிலையில், இந்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். கடந்த, 2014ஆம் ஆண்டு, உலக உணவுத் திட்டத்தால் இந்த மக்களின் மருத்துவத் தேவைக்கான போக்குவரத்துக்களுக்கு ஓட்டோ ஒன்று வழங்கப்பட்டிருந்தது. எனினும், குறித்த ஓட்டோ பழுதடைந்த நிலையில் காணப்படுவதால், இதனை திருத்தி பயன்படுத்துவ தற்கான ஏற்பாடுகளை செய்து தர வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஐ)

# சகல எரிபொருட்களுக்கும் முல்லைத்தீவில் தட்டுப்பாடு!

*முல்லைத்தீவு, மார்ச் 28*

முல்லைத்தீவு மாவட்டத்தில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் சகல வகை எரிபொருள்களுக்கும் கடந்த சில நாட்களாக தட்டுப்பாடு நிலவுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த 23ஆம் திகதி தொடக்கம் இன்று வரையும் எதுவித எரிபொருள்களும் இல்லாத நிலையில், எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குள் செல்ல முடியாதவாறு தடுப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மண்ணெண்ணெய், பெற்றோல் மற்றும் டீசல் அனைத்தும் தீர்ந்துள்ள நிலையில் எப்போது வரும் என்று தெரியாத நிலை காணப்படுகிறது. இதனால், எரிபொருளுக்காக செல்லும் தாம் தினமும் ஏமாற்றத்தையே சந்திப்பதாக மக்கள் தெரிவித்தனர். (ஐ)

# அரசாங்கத்தை பிணையெடுக்க கூட்டமைப்பு தயாரா கிவிட்டது!

## காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் சாடல்!

**யாழ்ப்பாணம், மார்ச் 28**

**கடுமையான பொருளாதார பிரச்னையிலிருந்து இலங்கையை பிணை எடுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகிவிட்டது என்பதைத்தான் ஜனாதிபதியுடனான பேச்சின் பின்னர் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கும் கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட ஈழத் தமிழர்களின் உறவினர்கள் அமைப்பின் பணிப்பாளர் கருணாவதி பத்மநாதன் தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அரச பிரதிநிதிகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப்கும் இடையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற சந்திப்பு தொடர்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட ஈழத் தமிழர்களின் உறவினர்கள் அமைப்பு இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக அவ் அமைப்பினால் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்தி குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

தமிழ் மக்களுக்கென பிரத்தியேகமாக அரசியல் பிரச்னை ஒன்றோ, அல்லது அன்றாடப் பிரச்னைகளோ இருப்பதாக சிறிலங்காவின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒருபோதும் ஏற்றுக்கொண்டவரல்ல. அதனால்தான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு இரண்டரை வருடங்கள் சென்றுள்ள நிலையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவதை அவர் தவிர்த்து வந்திருந்தார். தான் தனித்து சிங்கள மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் என்பதை அவர் தொடர்ச்சியாக வெளிப்படுத்தியும் வந்திருக்கின்றார்.

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அன்றாடப் பிரச்சினைகளான காணி அபகரிப்பு, மீள் குடியேற்றம், அரசியல் கைதிகள் விவகாரம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் உள்ளிட்ட விடயங்களின் சர்வதேசத்துக்கு வாக்குறுதிகளைக் கொடுத்திருந்தும்கூட, எந்தவிதமான நகர்வையும் முன்னெடுக்க அரசாங்கம் அக்கறை காட்டவில்லை. பதிலாக மிருசுவிலில் தமிழ் மக்களைப் படுகொலை செய்தமைக்காக மரண தண்டனைக்குள்ளான சிங்கள படை அதிகாரி ஒருவரை தமது அதிகாரத்தை பாவித்து மன்னிப்பளித்து ஜனாதிபதி விடுதலை செய்தார். குமாரபுரம் படுகொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

அரசாங்கம் எவ்வாறான நிலையில் தமிழ் மக்களின் பிரச்னைகளை அணுகும் என்பதற்கு இவை இரண்டும் மட்டுமல்ல மேலும் பல உதாரணங்கள் உள்ளன.

இப்போது பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்து, சிங்கள மக்கள் கொதித்தெழுந்து வீதிகளில் இறங்கியுள்ள நிலையில், மேற்கு நாடுகளின் உதவி அரசாங்கத்துக்கு அவசரமாகத் தேவையாகவுள்ளது. இல்லையெனில் மக்கள் கிளர்ச்சி ஒன்று



வெடிக்கலாம் என்பதும், எதிரணிகள் அதனைப் பயன்படுத்த தயாராக இருப்பதும் அரசுக்கு எச்சரிக்கையாகவுள்ளது.

இந்தப் பின்னணியில் அமெரிக்கா போன்ற மேற்கு நாடுகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு பேச வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன. கடந்த வாரம் கொழும்பு வந்த அமெரிக்க அரசியல் விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் விக்ரோரியா நூலான்ட், ஜனாதிபதியுடனான சந்திப்பின்போதும் இதனை வலியுறுத்தினார். அத்துடன், புலம்பெயர்ந்த தமிழர்களுடன் பேச வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார்.

இந்தப் பின்னணியில்தான், இரண்டரை வருடங்களாக கூட்டமைப்புடன் பேச்சை தவிர்த்து வந்த ஜனாதிபதி அவசரமாக அவர்களைப் பேச்சுக்கு அழைத்தார். கூட்டமைப்பும் எந்த நிபந்தனைகளும் இன்றி பேச்சுக்கு சென்றிருக்கின்றது.

இது பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அவசியமாகவுள்ள மேற்கு நாடுகளின் உதவியைப் பெறுவதற்காக கோட்டாபய ராஜபக்ஷ அரசு போடும் நாடகத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் துணை போகின்றதா என்ற கேள்வியைத்தான் எழுப்புகின்றது. அந்தியச் செலாவணிப் பிரச்னையிலிருந்து இலங்கையை பிணை எடுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகிவிட்டது என்பதைத்தான் ஜனாதிபதியுடனான பேச்சுக்களின் பின்னர் கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவிக்கும் கருத்துக்கள் உறுதிப்படுத்துகின்றன.

காணி அபகரிப்பு தொடர்பில் தெரியாத ஒருவராகவா ஜனாதிபதி இதுவரை இருந்துள்ளார்? 2010 க்கும் 2015 க்கும் இடைப்பட்ட காலத்தில் ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷ அரசுடன் 18 சுற்றுப் பேச்சுக்களை கூட்டமைப்பு நடத்தியது. அப்போது பேசப்பட்ட விடயங்கள்தான் வெள்ளிக்கிழமை கோட்டாபயவுடன் நடந்த பேச்சுக்களின் போதும் பிரஸ்தாபிக்கப்பட்டன. இவை தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது என்பது போல ஜனாதிபதி சொல்வது முற்றுமுழுதாக ஒரு நாடகம். அதனை நம்புவது போல, வெளியே வந்து கூட்டமைப்பின் பேச்சாளர் சொல்லும் தகவல்கள் சர்வதேச சமூகத்திடமிருந்து அரசைப் பாதுகாக்க கூட்டமைப்பு தயாராகிவிட்டது என்பதை பகிரங்கப்படுத்துகின்றது.

தமிழர்களுடைய அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புக்களை தடை செய்துவிட்டு தமக்கு சார்பான சில அமைப்புக்களுடன் பேசுவதற்கான திட்டம் ஒன்றுடன்தான் அரசு செயல்படுகின்றது. புலம்பெயர் தமிழர்களின் நிதியை வரவழைக்கவே இந்த சதியின் நோக்கம். இதற்கும் கூட்டமைப்பு துணை போவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. தாயகத்திலும், புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகள் இந்த நிலைமைகளைப் புரிந்து கொண்டு செயற்படுவார்கள் என நாம் நிச்சயமாக நம்புகிறோம். (ஐ)

# தங்கத்தின் விலை நேற்றும் எகிறியது!

*கொழும்பு, மார்ச் 28*

வார இறுதியில் தங்கத்தின் விலையில் சிறிது சரிவு இருந்தாலும், கடந்த 30 நாட்களில் தங்கத்தின் விலை சுமார் 3 சதவீதம் அதாவது 56 டொலரினால் உயர்ந்துள்ளது.

இதேவேளை, கடந்த ஒரு வருடத்தினுள் தங்க விலையின் அதிகரிப்பு 13 சதவீதம் அதாவது 230 டொலராக பதிவாகியுள்ளது.

இதேவேளை, கொழும்பு செட்டியார் தெருவில் 24 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 180,000 ரூபாயாக அதிகரித்துள்ளது. 22 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 160,000 ரூபாயாகும்.

டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி கடும் சரிவை சந்தித்துள்ளமையே உள்நாட்டில் தங்கம் விலை உயர்வடைவதற்கு காரணம் என தங்க நகை வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)



# முதிரை மரக்குற்றிகள் கடத்தல் முறியடிப்பு!

வவுனியா, மார்ச் 28

தவசிக்குளம் பகுதியில் சட்டவிரோதமாக கடத்திச் சென்ற முதிரை மரக்குற்றிகளை மடுக்கந்தை விசேட அதிரடிப் படையினர் மடக்கிப்பிடித்து நெளுக்குளம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

நேற்று முன்தினம் அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரகசிய தகவலின் அடிப்படையில் மடுக்கந்தை விசேட அதிரடிப்படையினரால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மேலும், இந்தக் கடத்தலில் ஈடுபட்ட ஓமந்தை, கூமாங்குளம், தோணிக்கல் பகுதியை சேர்ந்த மூவரை கைது செய்ததுடன் கடத்தலுக்குப் பயன்படுத்திய கப் ரக வாகனம் மற்றும் 10 முதிரை மரக்குற்றிகளையும் கைப்பற்றி நெளுக்குளம் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டது.

இச்சம்பவம், தொடர்பான மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# புதையல் தோண்டிய இரு நபர்கள் கைது!

கொழும்பு, மார்ச் 28

அனுராதபுரம் ஹொரவப்பொத்தான பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மோரவெள, ஒலுகஸ்கட பிரதேசத்தில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இருவரை பொலிஸார் நேற்றுமுன்தினம் இரவு கைதுசெய்துள்ளனர்.

மோரவெள பிரதேசத்தை சேர்ந்த 28, 59 வயதுகளையுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில், பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

# மின் தடை சீராகும்வரை மின் கட்டணம் உயராது!

**கொழும்பு, மார்ச் 28**

**மின் தடை சீராகும்வரை உத்தேச மின்சார கட்டணத்தை அதிகரிக்காதிருப்பது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.**

இந்த விடயம் தொடர்பில் அண்மையில் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், தொடர்ந்தும் மின் விநியோகத்தை முன்னெடுத்து செல்வதற்கு உற்பத்தி செலவினங்களுக்கு ஏற்றவகையில் கட்டணம் அதிகரிக்கப்பட வேண்டும் என யோசனை முன்வைக்கப்பட்டது.

இதற்கமைய, அமைச்சரவையால் மின்சார சபையிடம் இருந்து மின்கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனை கோரப்பட்டிருந்தது. இதன்படி, குறித்த யோசனை தற்போது அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கடத்தப்பட்டவரை வாகனத்தால் மோதிக் கொல்வதற்கு முயற்சி!

## கிளிநொச்சியில் பயங்கரம்

கிளிநொச்சி, மார்ச் 28

கிளிநொச்சி - கனகபுரம் வீதியில் நபர் ஒருவரை கும்பல் ஒன்று வாகனத்தால் மோதி கொலை செய்ய முயன்ற நிலையில் பாதிக்கப்பட்டவர் ஆபத்தான நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் நேற்றுமுன் தினம் சனிக கிழமை மாலை 4 மணியளவில் இடம்பெற் றுள்ளது.

படுகாயமடைந்த நிலையில் இரத்தக் காயத்துடன் காணப்பட்ட நபர் ஒருவரை வாகனம் ஒன்றில் மூவர் ஏற்றி வந்திருக்கின்றனர். அந்த வாகனத்திலிருந்து காயத்துடன் காணப்பட்ட நபர் தப்பி ஓடுவதற்கு முயன்று வீதியில் குதித்து ஓடியுள்ளார்.

இதையடுத்து, அவரை கடத்தி வந்தனர் என்று நம்பப்படும் நபர்கள், ஓடியவரை வாகனத்தால் இரண்டு தடவைகள் மோதிக் கொல்ல முயன்றனர். இரண்டாவது தடவையில் ஓடியவரை வாகனம் மோதித் தள்ளியது. இதில், அவர் படுகாயமடைந்தார்.

இதேவேளை வாகனமும் விபத்துக்குள்ளாகியுள்ளது. சம்பவத்தை அடுத்து வாகனத்தில் வந்த மூவரும் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளனர் என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

கனகபுரம் வீதியில் உள்ள மதுபான விடுதி ஒன்றில் இருந்தே குறித்த நபர்களுக்கு இடையில் முரண்பாடு ஏற்பட்டிருந்ததாக முதல்கட்ட விசாரணைகளில் தெரிய வந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

படுகாயம் அடைந்தவர் அதிதீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். மேலதிக விசாரணையினை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## தடுப்பூசி அட்டை கட்டாயம்:

# பொது இடங்களின் பட்டியல் ஏப்ரல் மாதம் வெளியிடப்படும்!

கொழும்பு, மார்ச் 28

ஏப்ரல் 30 ஆம் திகதி முதல், பூரணமாக தடுப்பூசி செலுத்திக் கொண்டமைக்கான அத்தாட்சி அட்டை கட்டாயமாக வைத்திருக்க வேண்டிய பொது இடங்களின் பட்டியல் விரைவில் அறிவிக்கப்படும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், எதிர்வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு முன்னதாக அடுத்த 2 வாரங்களுக்குள் பூஸ்டர் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளுமாறு தொற்று நோய் பிரிவின் பிரதம தொற்று நோய் நிபுணர் மருத்துவர் சமித்த கினிகே அறிவுறுத்தி யுள்ளார்.

இதேவேளை, ஏப்ரல் 30ஆம் திகதி முதல் பொது இடங்களுக்கு மூன்று தடுப்பூசிகளையும் ஏற்றாதவர்கள் செல்ல முடியாது என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# போக்குவரத்து திணைக்களத்தின் நடமாடும் சேவை யாழ்ப்பாணத்தில்!

யாழ்ப்பாணம், மார்ச் 28

மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மற்றும் வட மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களம் என்பன இணைந்து நடத்தும் "வீதி ஒழுங்குகளை பேணி பாதுகாப்பாக பயணிப்போம்" எனும் தொனிப்பொருளிலான நடமாடும் சேவை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் சுஜிவா சிவதாஸ் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும், போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் மற்றும் வடமாகாண ஆளுநர், வட மாகாண உள்ளூராட்சி அமைச்சு ஆகியோரின் நெறிப்படுத்தலில் நடைபெறவுள்ள இவ் நடமாடும் சேவைகள் எதிர்வரும் ஏப்ரல் 9, 10ஆம் திகதிகளில் காலை 9மணி முதல் மதியம் 3 மணி வரை யாழ்ப்பாணம், கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சபை வளாக கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ளது.

பல ஆண்டுகளுக்கு மேலாக தீர்க்கப்படாத பிரச்னைகளை இனங்கண்டு தீர்க்கும் நோக்கில் இந்த நடமாடும் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் சேவையில், வாகன உடைமை மாற்றங்கள், வாகன பதிவுப்புத்தகத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளல், வாகனத்தின் நிறைச் சான்றிதழை பெறல், வாகன உடமை மாற்ற படிவங்களை கையேற்றல், சாரதி அனுமதிப் பத்திரப் பரீட்சை, விசேட தேவையுடையவர்களுக்கான சாரதி அனுமதிப் பத்திரப் பரீட்சை, சர்வதேச சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளல், பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களின் மாற்றம் தொடர்பான விடயங்கள், சாரதி அனுமதி பத்திரத்துக்கான மருத்துவ பரிசோதனை, வாகன இலக்கத் தகடுகளை பெற்றுக்கொள்ளல், 2015ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்ட முன்மொழி அடிப்படையில் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிளுக்கான நிபந்தனை நீக்கம் போன்ற நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன.

தற்போதைய சூழ்நிலையில் போக்குவரத்தில் உள்ள இடர்பாடுகள் மற்றும் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மக்கள் நேரடியாக கொழும் புக்குச் சென்று சேவைகளை பெற்றுக் கொள்வதில் உள்ள இடர்பாடுகளை கருத்தில் கொண்டு மக்களுக்கு அருகில் இந்த சேவைகளை வழங்கும் நோக்கில் இந்த நடமாடும் சேவையை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இந்த நடமாடும் சேவை தொடர்பான மேலதிக விவரங்களை பிரதேச செயலகங்களில் உள்ள மோட்டார் வாகன போக்குவரத்து பிரிவிலும் யாழ். மாவட்ட செயலகத்தில் உள்ள பிரதி மோட்டார் போக்குவரத்து ஆணையத்திலும் வட மாகாண போக்குவரத்து பிரிவிலும் பெற்றுக்கொள்ளமுடியும் - என்றார். (ஐ)

# அரசாங்கத்துடன் இணைந்து செயல்படுவது ஆத்ம திருப்தி!

## அலி சப்ரி ரஹீம் எம். பி.

புத்தளம், மார்ச் 28

பொருளாதார நெருக்கடியிலிருந்து எமது நாட்டையும், மக்களையும் பாதுகாப்பதை விட்டு விட்டு, இதை வைத்து அரசியல் செய்வதை கட்சித் தலைவர்கள் கைவிட வேண்டும் என்று புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் தெரிவித்தார்.

கற்பிட்டி நுரைச்சோலையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்புரிமைகளை அனுபவிப்பதற்காக என்னை புத்தளம் மாவட்ட மக்கள் பாராளுமன்றத்துக்கு அனுப்பவில்லை.

எனது கட்சியைவிட மக்களின் அபிலாஷைகளே எனக்கு முக்கியம் எனக் கருதி , எனது மாவட்ட மக்களின் அங்கீகாரத்தோடு அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கி வருவதோடு, புத்தளத்தில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும் கூறினார்.

அரசாங்கத்தோடு இணைந்து மக்களுக்குப் பணியாற்றுவது ஆத்ம திருப்தியை தருவதாகவும், ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் இரண்டு வருடங்கள் உள்ளன. பாராளுமன்ற தேர்தலுக்கு இன்னமும் மூன்று வருடங்கள் இருக்கிறது. எனவே நாட்டின் தற்போதைய நிலையில் இது அரசியல் செய்யும் காலம் அல்ல என்றார். (ஐ)

# உத்தேச அரசமைப்பு வரைவு இரு மாதங்களில் இறுதியாகும்

கொழும்பு, மார்ச் 28

**உத்தேச புதிய அரசியலமைப்பு வரைவு இரண்டு மாதங்களில் இறுதி செய்யப்படவுள்ளது. இந்நிலையில் இந்த வரைவு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - அரச தரப்பு இடையே மற்றொரு கலந்துரையாடலொன்றும் விரைவில் நடத்தப்பட உள்ளதாக தெரிய வருவதாக தி சண்டே மோர்னிங் செய்தி வெளியிட்டுள்ளது.**

கடந்த வெள்ளிக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனான கலந்துரையாடலின் போது, ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையிலான நிபுணர்கள் குழுவின் இறுதி வரைவு இரண்டு மாதங்களில் இறுதி செய்யப்படும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

நிரந்தர அரசியல் தீர்வு தொடர்பில் கூட்டமைப் பினர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

இந்நிலையில், உத்தேச புதிய அரசியலமைப்பு இறுதி வரைவு இறுதி செய்யப்பட்டதும் இதுகுறித்து மற்றுமொரு சுற்று கலந்துரையாடலை நடத்த முடியும் என ஜனாதிபதி குறிப்பிட்டதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விசாரணை இன்றி நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் விடுதலை தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை நீதி அமைச்சர் - அலி சப்ரி மற்றும் கூட்டமைப்பு எம்.பி. சுமந்திரன் ஆகியோர் இணைந்து முன்னெடுக்குமாறு ஜனாதிபதி கேட்டுக்கொண்டார். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட 100,000 ரூபாய் இழப்பீடு ஒரு இடைக்கால நடவடிக்கை மட்டுமே எனவும் ஜனாதிபதி கூறினார்.

இந்நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று நாங்கள் கோரினோம். காணாமலாக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது? என்ற உண்மை கண்டறிவதே வட,கிழக்கில் இடம்பெறும் போராட்டங்களின் நோக்கம் என ஜனாதிபதிக்கு விளக்கியதாக சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் வெற்றியடைந்ததா? என கேட்டபோது, இதில் பேசப்பட்ட விடயங்கள் குறித்த எதிர்கால நடவடிக்கையிலேயே இது வெற்றியா? தோல்வியா? என்பது குறித்து தீர்மானிக்க முடியும் என சுமந்திரன் தெரிவித்தார் என்றும் தி சண்டே மோர்னிங் தெரிவித்துள்ளது. (ஐ)

## சிறுவன் கடத்தல் தம்பதியர் கைது

கொழும்பு, மார்ச் 28

தனியார் கல்வி நிறுவனத்திலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த 16 வயது சிறுவனை கடத்திய குற்றச்சாட்டில் தம்பதியர் கைதாகியுள்ளனர்.

வெயாங்கொடையில் இடம்பெற்ற கடத்தல் சம்பவம்தொடர்பில் தம்பதியினரை பேலியகொடை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

கடத்தப்பட்ட சிறுவன், கொழும்பு, மாகொல வடக்கைச் சேர்ந்த யுவதி ஒருவருடன் முகநூல் ஊடாக தொடர்பில் இருந்ததாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

பின்னர் முகநூலில் இருவரும் பலவித குறிப்புக்கள் இட்டதாகவும், யுவதியை அவமதிக்கும் விதமாக சிறுவன் பதிவிட்டதையடுத்தே கடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


சிறுவன் தனது கையடக்க தொலைபேசியை விற்பனை செய்ய இணையத்தளமொன்றில் விளம்பரம் செய்திருந்தார். அந்த இலக்கத்தை கண்டறிந்து, சிறுவனுடன் தம்பதியினர் தொடர்பேற்படுத்தி, கையடக்க தொலைபேசியை வாங்குபவர்கள் போல பல முறை பேசியுள்ளனர்.

சிறுவன் வெயாங்கொடையில் உள்ள தனியார் கல்வி நிலைய வகுப்புக்கு சென்றுவிட்டு வீடு திரும்பிய போது, கையடக்க தொலைபேசியை வாங்கப் போவதாக குறிப்பிட்ட தம்பதியினர் தெரிவித்து, சிறுவனை நகரின் மையப் பகுதிக்கு அழைத்து, காரில் கடத்திச் செல்லப்பட்டுள்ளாரென பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## ஜனாதிபதி – கூட்டமைப்பு பேச்சு; அமெரிக்க தூதுவர் வரவேற்பு

கொழும்பு, மார்ச் 28

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்துக்கும், இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடை யிலான பேச்சுக்கள் தொடர வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.



இது தொடர்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ருவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

”தமிழ் அரசியல் பிரதிநிதிகளுக்கும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பை அமெரிக்கா வரவேற்கின்றது. இந்தச் சந்திப்புத் தொடர வேண்டும் என்று ஊக்குவிக்கின்றது“ என்று அவர் பதிவிட்டுள்ளார். (ஐ)

## அமைச்சரின் சாரதி கொலை; மற்றொரு சந்தேகநபர் கைது!

கொழும்பு, மார்ச் 28

எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகேயின் சாரதி தாக்கி கொலை செய்த குற்றச்சாட்டில் மற்றொரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொரலஸ்கமுவ பிரதேசத்தில் வைத்து 19 வயதுடைய இளைஞன் ஒருவர் கல்கிசை குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நேற்று முன்தினம் பிற்பகல் கைது செய்யப்பட்டாரென பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றம் நடந்த இடத்தில் கிடைத்த சி.சி.ரீ.வி. காட்சிகளின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் குற்றச் செயலுக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இம்மாதம் 21ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். கவனக்குறைவாக வாகனம் ஓட்டியதால் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறில், கைதான குழுவால் கட்டைகள் மற்றும் கூரிய பொருட்களால் சாரதி அடித்துக் கொல்லப்பட்டரெனப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## அரசாங்கத்துக்கு எதிராக நாமும் வீதியிலிறங்க நேரும்

### முருத்தெட்டுவ ஆனந்த தேரர் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 28

ஒட்டுமொத்த நாட்டு மக்களும் அரசாங்கத்தை கடுமையாக விமர்சிக்கிறார்கள். நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அதிக கவனம் செலுத்த வேண்டும். அரசாங்கம் முறையாக செயல்படாவிடின் அரசாங்கத்துக்கு எதிராக நாமும் வீதியில் இறங்க நேரிடும். எதிர்வரும் 31 ஆம் திகதி மகாசங்கத்தினரை ஒன்றிணைந்து உறுதியான தீர்மானத்தை அறிவிப்போம் என அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

அபயராம விகாரையில் சனிக்கிழமை அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், சிறந்த நோக்கத்திற்காக ஆட்சிமாற்றத்தில் முன்னின்று செயல்பட்டோம். அரசாங்கத்தை விமர்சிக்காதவர்கள் உள்ளவர் வீட்டில் இருந்து ஒரு குவளை தண்ணீர் பெற்றுக் கொள்வது தற்போது ஆச்சரியமாகவுள்ளது அந்தளவுக்கு முழு நாட்டு மக்களும் அரசாங்கத்தை கடுமையாக விமர்சிக்கிறார்கள்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மீது நாட்டு மக்கள் முழுமையான நம்பிக்கை கொண்டுள்ளார்கள். நடைமுறையில் தோற்றம் பெற்றுள்ள பொருளாதார மற்றும் அரசியல் பிரச்னைகளுக்கு தீர்வு காண பிரதமர் உரிய கவனம் செலுத்த வேண்டும். நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ மீது மக்கள் மத்தியில் நல்ல நிலைப்பாடு கிடையாது. அவரை 6 மாத காலத்திற்கு அமைச்சு பதவியில் இருந்து விலக்கி வைக்குமாறு ஏற்கெனவே வலியுறுத்தினோம். ஒன்று அவரை பதவி நீக்க வேண்டும் அல்லது அவருக்கு பிறிதொரு அமைச்சு பதவியை வழங்க வேண்டும்.

அரசாங்கம் தவறுகளை திருத்திக்கொண்டு மக்களாணைக்கு மதிப்பளித்து செயல்



படாவிடின் நாமும் அரசாங்கத்திற்கு எதிராக வீதியில் இறங்க நேரிடும்.நாடு எதிர்க்கொண்டுள்ள நெருக்கடியான நிலைமை குறித்து எதிர்வரும் 31ஆம் திகதி அபயராம விகாரையில் சகல மகா சங்கத்தினரையும் ஒன்றிணைத்து விசேட ஆலோசனை கூட்டத்தை நடத்தவுள்ளோம்.

மகாசங்கத்தினரும் அரசாங்கத்தின் செயல்பாடு குறித்து அதிருப்தியடைந்துள்ளார்கள். 31ஆம் திகதி எமது அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் குறித்து பல விடயங்களை பகிரங்கப் படுத்துவோம். நாட்டின் எதிர்காலத்தை கருத்தில்கொண்டு சிறந்த தீர்மானங்களை முன்னெடுப்போம் - என்றார். (ஐ)



### - 55 வருடங்களின் பின்னர் -

## இரத்மலானையிலிருந்து விமான சேவை ஆரம்பம்!

கொழும்பு, மார்ச் 28

சுமார் 55 வருட இடைவெளிக்குப் பின்னர் கொழும்பு - இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து சர்வதேச விமான சேவை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாலைதீவு எயர் நிறுவனத்தின் கியூ2944 விமானம் நேற்று காலை இரத்மலானை விமான நிலையத்தில் தரையிறங்கியது

இலங்கையில் உள்ள ஒரு தனியார் நிறுவனம் மற்றும் மாலைதீவைச் சேர்ந்த மற்றொரு நிறுவனத்தால் இங்கிருந்து விமானங்கள் இயக்கப்படும்.

இரத்மலானை விமான நிலையத்தில் விமானங்கள் தரையிறங்கும் மற்றும் விமான தரிப்பு கட்டணத்தை குறைக்க அரசாங்கம் சமீபத்தில் முடிவு செய்தது.

இந்த விமான நிலையத்தை குறைந்த செயலில் இயக்கப்படும் விமான நிறுவனங்களின் மையமாக செயற்படுத்த அரசாங்கம் திட்டங்களை வகுத்துள்ளது.

இரத்மலானை சர்வதேச விமான நிலையம் 1938 இல் திறக்கப்பட்டது. 1968 இல் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து விமான சேவைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இரத்மலானையில் இருந்து சர்வதேச விமான சேவைகள் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# புலம்பெயர் தமிழர் நிதியில் கண் வைக்கும் அரசாங்கம்

**பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணவெனக் கூறி வெற்றி பெறாத சர்வகட்சி மாநாடு, புலம்பெயர்ந்து வாழும் தமிழரின் பைகளுக்குள் கை வைத்து டொலர்களை எவ்வாறு கொண்டுவரலாம் என திட்டமிடுவதில் முடிவடைந்துள்ளது. தங்கள் உறவுகளுக்கு உதவவும் தங்களின் பூர்வீக மண்ணை வளங்கொழிக்க வைக்கவும் புலம்பெயர் தமிழர் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு அரசாங்கம் என்ற பெயரில் இடைத்தரகர்கள் தேவையா?**

**பனங்காட்டான்**

பரவலாகவும் மிகவும் பரபரப்பாகவும் பேசப்பட்ட கோட்டாபாயவின் சர்வகட்சி மாநாடு, பலராலும் எதிர்வு கூறப்பட்டவாறு வெறும் பேச்சோடு முடிவடைந்துவிட்டது.

இந்த மாநாட்டை நடத்துமாறு கோரிய மைத்திரிபால சிறிசேனவின் சிறீலங்கா சுதந்திர கட்சி முக்கியமான தரப்பாக இதில் பங்கேற்றது. ஒற்றை பாராளுமன்ற உறுப்பினரைக் கொண்ட ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க சில கருமங்களைப் பகிரங்கப்படுத்தும் நோக்குடன் கலந்து நினைத்ததை முடித்துள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் மூன்றிலிரண்டு அணியினர் (தமிழரசும் புளொட்டும் மட்டும்) சமுகமளித்து தங்கள் கருத்தை வெளியிட்டனர். இந்த மாநாட்டில் கலந்து கொள்ளத் தவறினால் பின்னர் கோட்டாபாயவுடனான சந்திப்புகளை மேற்கொள்ள முடியாது போகலாம் என்ற உள்ளச்சம் காரணமாக இவர்கள் கலந்து கொண்டிருக்கலாம்.

மற்றப்படி, சர்வகட்சி மாநாடு என்பது சர்வதேச அளவில் கோட்டாபாய தரப்புக்கு எந்தப் பலனையும் அளித்திருக்கவில்லை. இதன் காரணமாகவே சகல கட்சிகளையும் இணைத்து இன்னுமொரு சர்வகட்சி மாநாட்டை நடத்தப் போவதாக கோட்டாபாய அறிவித்துள்ளதானது முதற் தோல்வியை மறைக்கும் முயற்சி. முப்பது வருட யுத்தம் ஏற்பட்டதுக்கான காரணத்துக்குரிய விடயங்களை தீர்த்து வைப்பதற்கு இன்னமும் நடவடிக்கைகள் எடுக்கப்படாமையே தற்போதைய பிரச்சனைகளுக்குக் காரணமென இம்மாநாட்டில் எடுத்துக்கூறிய சம்பந்தன், தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு காணாமல் வேறு எந்தப் பிரச்னைக்கும் தீர்வு காண இயலாது என்று அழுத்திச் சொன்னார்.

சம்பந்தனின் உதவியாளராக மாநாட்டில் பங்கேற்ற சுமந்திரன், பொருளாதார முன்னேற்றத்துக்கான திட்டமொன்றை தாங்கள் ஏற்கனவே முன்வைத்துள்ளதாகக் குறிப்பிட்டதோடு, இதற்கு ஏதுவாக புலம்பெயர் சமூகத்தின் ஒத்துழைப்பு பெறப்பட வேண்டுமென வலியுறுத்தினார். கூட்டமைப்பின் வெளிவிவகார அமைச்சர் போன்றும், புலம்பெயர் அமைப்புகளின் பேச்சாளர் போன்றும் சுமந்திரனின் கருத்துகள் காணப்பட்டன (இவைபற்றி வேறொரு சந்தர்ப்பத்தில் விரிவாக ஆராயலாம்).

கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சி.வி.விக்னேஸ்வரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரை தலைவர்களாகக் கொண்ட தமிழ்த் தேசிய கட்சிகள் மூன்றும் மாநாட்டைப் புறக்கணித்தன. மனோ கணேசனின் அணியினரும் பங்கேற்கவில்லை. ஆனால் ஜீவன் தொண்டமானைத் தலைவராகக் கொண்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கலந்து கொள்ளாதது எவரும் எதிர்பார்க்காதது.

சஜித் பிரேமதாசவின் எதிர்க்கட்சி, அமைச்சர்கள் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்ட விமல் வீரவன்ச - உதய கம்மன்பில - வாசுதேவ நாணயக்கார அணியினர், ஜே.வி.பி. மற்றும் முஸ்லிம் கட்சிகளும் மாநாட்டைப் பகிஸ்கரித்தன. பொறுப்பற்ற செயற்பாடுகளாலும் ஊழலாலும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ள கோட்டாபாய அரசு அதிலிருந்து தன்னைப் பிணையெடுத்து, அனைத்துக் கட்சிகளினதும் தலையில் ஏற்றுவதற்கான உள்நோக்கமே சர்வகட்சி மாநாடு என இந்தக் கட்சிகள் தெரிவித்ததில் உண்மை இல்லாமலில்லை.



இம்மாநாடு நடைபெற்ற அதே நேரத்தில் மாபெரும் மக்கள் பேரணி ஒன்றை ஜே.வி.பி.யினர் கொழும்புப் பெரும்பாகத்திலுள்ள நுகேகொடையில் நடத்தினர். பல்லாயிரக்கணக்கானவர்கள் அரச எதிர்ப்பு சுலோகங்களுடனும் கோசங்களுடனும் இதில் பங்கேற்றனர். (நுகேகொடைக்கு அருகிலுள்ள மிரிகான என்ற இடத்தில்தான் கோட்டாபாய வசிக்கும் வீடு இருக்கிறது)

விமல் வீரவன்ச - உதய கம்மன்பில ஆகியோரின் தலைமையிலான சுமார் பத்து அரசியல் அணிகளின் பிரமுகர்கள் இதே 23ஆம் திகதியன்று கண்டி தலதா மாளிகைக்குச் சென்று மல்வத்த - அஸ்கிரிய பீடாதிபதிகளிடம் ஆசி பெற்றதுடன் தங்களின் அடுத்த கட்ட நடவடிக்கை பற்றியும் எடுத்துக் கூறினர். இதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னரே கோட்டாபாயவும் தலதா மாளிகை சென்று பீடாதிபதிகளிடம் ஆசி பெற்று தமது கையில் நூல் கட்டுவித்தார். தலதா மாளிகைக்கு வெளியே வந்த விமல் வீரவன்ச விரைவில் தற்போதைய ஆட்சி கவிழ்க்கப்படுமென்றும், அதற்கு முன்னர் அரசின் பெரும்பான்மை இழக்கப்படுமென்றும் அறிவித்துள்ளார்.

அநுராதபுரம் ஞானக்காவும், தலதா மாளிகை பீடாதிபதிகளும் அரசியல் பேதமின்றி சகல பௌத்த மத நம்பிக்கையாளர்களுக்கும் "வெற்றி" ஆசிர்வாதம் வழங்குவது விநோதமானது. அரசியல் தலைவர்கள் இவர்களை நம்பி நாடிச் செல்வதும் விந்தையானது.

சர்வகட்சி மாநாட்டின் முடிவில் முக்கியமான செய்தியாக ரணில் விக்கிரமசிங்க ஊடகங்களில் இடம்பெற்றார். கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக சர்வதேச நாணய சபையிடம் கடனுக்குச் செல்லுமாறு வலியுறுத்தி வந்தவர் இவரே. கடைசியில் பஸில் ராஜபக்ஷ அங்கு கையை நீட்டி விட்டார்.

இது தொடர்பான ஆவணங்களை பகிரங்கப்படுத்துமாறு இம்மாநாட்டில் ரணில் கேட்டபோது அவை இன்னும் வந்து சேரவில்லையென்று பஸில் பதிலளித்தார். அப்படியானால், சர்வதேச நாணய சபை அதிகாரிகளை அழைத்துப் பேசுவோமென ரணில் கூறியபோது, ஆவணங்கள் வந்துவிட்டன - ஆனால் இப்போது பகிரங்கப்படுத்த முடியாது என பஸிலை பதிலளிக்க வைத்ததன் ஊடாக அவர் முதலில் கூறிய பொய்யை ரணில் அம்பலப்படுத் தினார்.

அடுத்ததாக, நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு முன்னைய நல்லாட்சி அரசாங்கமே பொறுப்பு என மத்திய வங்கி ஆளுனர் அஜித் கப்ரால் தெரிவித்தபோது ரணிலுக்குச் சூடேறியது. சுதந்திரக் கட்சியின் அழைப்பின் பேரிலேயே மாநாடு நடைபெறுவதாகவும், அவர்கள் கேட்டுக் கொண்டதாலேயே தாம் பங்குபற்றுவதாகவும் தெரிவித்த ரணில், நல்லாட்சியில் உணவு இருந்தது, எரிபொருள் இருந்தது - இதற்கு மேல் என்ன சொல்ல வேண்டுமென்று இறுக்கமாகப் பதிலளித்தார். நிலைமை கட்டை மீறிப் போவதை உணர்ந்த கோட்டாபாய, மிகச் சாதுரியமாக ரணிலிடம் மன்னிப்புக் கோரி சமாளித்துக் கொண்டார்.

தமிழர் தரப்பைப் பொறுத்தளவில் இங்கு முக்கியமாகப் பார்க்கப்படக்கூடியது, புலம்பெயர் தமிழர் தொடர்பாக டயானா கமகே என்ற பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்த கருத்து. புலம்பெயர்ந்த தமிழரிடம் நிதி உதவி பெற்று வடமாகாணத்தை வளப்படுத்தலாமென்று டயானா கூற, அதனைச் செயற்படுத்த தாம் தயாராக இருப்பதாக சுமந்திரன் சொன்னார். (முற்கூட்டிய ஒத்திகை ஒன்று அரங்கேறியது போன்று இது காணப்பட்டது)

புலம்பெயர்ந்த தமிழர்களுடன் பேசுவது, தமிழரின் அரசியல் அபிலாசைகளுக்குத் தீர்வு காண்பது என்பவை கோட்டாபாயவின் அண்மைக்கால பரப்புரைகளில் பிரதானமான அம்சமாகக் காணப்படுகிறது. அதற்கு இம்மாநாடு மேலும் களம் அமைத்துக் கொடுத்தது.

மாநாடு நடைபெற்ற காலத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்காவின் அரசியல் விவகார உதவிச்செயலாளர் விக்டோரியா நூலண்டிடமும் இதே கருத்தை கோட்டாபாய முன்வைத்தார்.

புலம்பெயர்ந்தவர்களை சந்திப்பதில் தாம் ஆர்வமாக இருப்பதாகக் கோட்டாபாய குறிப்பிட்டபோது, அமெரிக்கா கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலுள்ள புலம்பெயர் மக்களுடன் கலந்துரையாடுமாறு விக்டோரியா நூலண்ட் ஊக்குவித்தார்.

புலம்பெயர் தமிழர் பற்றி கோட்டாபாய குறிப்பிடுவது இதுதான் முதன்முறையன்று. ஏற்கனவே ஐக்கிய நாடுகள் அவையின் செயலாளர் நாயகத்தைச் சந்தித்தபோதும், பின்னர் பிரித்தானியா சென்றிருந்த போதும் இதனை அவர் தெரிவித்தது ஞாபகம் இருக்கிறது.

மறுபுறத்தில், புலம்பெயர்ந்த தமிழர்களை புலிப் பயங்கரவாதிகள் என்றும், உள்நாட்டு பயங்கரவாதத்தை முறியடித்து விட்டோம் - இனி புலம்பெயர் பயங்கரவாதம்தான் எங்கள் இலக்கு என்று கோட்டாபாய ஏற்கனவே அறைகூவியதும் ஞாபகம் இருக்கிறது.

இதன் அடுத்த கட்டமாக, புலம்பெயர்ந்த தமிழர் பலரையும், அவர்களின் அமைப்புகள் பலவற்றையும் பெயர் குறிப்பிட்டு வர்த்தமானி ஊடாக தடை செய்ததும் இவர் தலைமையிலான சிங்கள அரசுதான்.

வடமாகாண சபை இயங்கியபோது புலம்பெயர் தமிழர் உதவியை சட்ட ரீதியாகப் பெற்று முதலமைச்சர் நிதியம் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டபோது அதற்குத் தடை விதித்ததும் இதே சிங்கள் ஆட்சிபீடம்தான்.

இவைகளுக்கு அப்பால், புலம்பெயர்ந்த உறவுகள் தங்கள் தாயக உறவுகளை மறவாது அவர்களின் கல்வி, தொழில் முயற்சி, முன்னேற்றம் மற்றும் உள்ளூர் கட்டுமானங்களில் தொடர்ந்து உதவி வருவது பரகசியமானது. இது ஆட்சியாளர்களுக்கும் தெரியும்.

சிங்கள் ஆட்சியாளர்கள் சொல்லி இதனை அவர்கள் செய்யவில்லை. அவர்களிடம் அனுமதி பெற்றும் செய்யவில்லை. அரசாங்கம் தனது குடிமக்களுக்குச் செய்ய வேண்டியவற்றை இன ரீதியாகப் பார்த்து இனவாதத்தை முன்னிறுத்தி தாயகத் தமிழரை பாரபட்சமாக நடத்தியதால்தான், புலம்பெயர்ந்த தொப்புள் கொடி உறவுகள் தாமாகவே முன்வந்து உதவி வருகின்றனர். இதில் அரசியல் கிடையாது. ஆனால், இன்று புலம்பெயர் தமிழர்களை தடவிக் கொடுத்து அவர்களை அணைப்பது போன்று நாடகம் போடும் சிங்களவர்களை நம்பி அவர்களிடம் நிதியைக் கையளிக்க இவர்கள் மடையர்கள் அல்ல.

அரசாங்கத்திடம் - ராஜபக்ஷக்களிடம் தமிழர் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றும் நோக்கம் ஆத்மசுத்தியாக இருக்குமானால் போர்க்குற்றத்துக்கான பொறுப்புக்கூறலையும், சர்வதேச நீதிப் பொறிமுறையையும் ஜெனிவாவில் ஏற்று இணக்கத்தை ஏற்படுத்த முதலில் முன்வர வேண்டும். இதனைவிடுத்து புலம்பெயர்ந்து வாழும் தமிழரை பணம் காய்க்கும் மரங்களாக எண்ணி அவர்கள் பைகளுக்குள் கை வைக்க கனவிலும் நினைக்கக் கூடாது. இவர்களை இனியும் இலகுவாக ஏமாற்றவும் முடியாது. சிங்கள பௌத்த தேசாபிமானத்துக்கு ஒத்தூதுவதற்கு தமிழர் தரப்பில் எவரும் முனையவும் கூடாது. ■

# உக்ரைன் அகதிகளுக்கு உதவிகளை அதிகரித்த அமெரிக்கா:ஏன்? எப்படி?




**பெரும்பாலான அகதிகள் ஏற்கனவே உக்ரைனியர்கள் அதிக அளவில் வசிக்கும் அமெரிக்காவின் நியூயார்க் நகர பகுதி, பென்சில்வேனியா, சிகாகோ மற்றும் வடக்கு கலிபோர்னியா போன்ற பகுதிகளில் குடியேறுவார்கள் என தெரிகிறது.**

ரஷ்ய படையெடுப்பால் வெளியேறும் உக்ரைன் அகதிகளுக்கான உதவியை, அமெரிக்கா விரிவுப்படுத்தியுள்ளது. சுமார் 1 லட்சம் உக்ரைன் அகதிகளை ஏற்றுக்கொள்வதாக அறிவித்துள்ளது. மேலும், உக்ரைனில் இருந்து வெளியேறிய மக்களுக்கு கைகொடுத்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கான ஆதரவையும் அதிகரிப்பதாக ஒப்புக்கொண்டுள்ளது.

சுமார் 3.6 மில்லியன் மக்கள் உக்ரைனில் இருந்து வெளியேறியுள்ளனர். ஆனால், பல தசாப்தங்களுக்கு முன்னர் தென்கிழக்கு ஆசியாவிலிருந்து வந்தவர்களின் எண்ணிக்கையை விட இது குறைவாகும்.

### அமெரிக்கா அறிவிப்பு என்ன?

ஐரோப்பிய நட்பு நாடுகளைச் சந்திப்பதற்காக பிரஸ்ஸல்ஸில் இருந்த ஜனாதிபதி ஜோ பைடன், உக்ரைனில் இருந்து வரும் ஒரு லட்சம் அகதிகளை அமெரிக்கா வரவேற்கும் என்றும், உக்ரைன் மீதான ரஷ்யா படையெடுப்பால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு, 1 பில்லியன் டாலர் நிதியுதவி அளிப்பதாகவும் உறுதியளித்துள்ளார்

உக்ரைனிலிருந்து வெளியேறிய மில்லியன் கணக்கான மக்களில் பெரும்பாலானோர் போலந்து, மால்டோவா, ரோமானியா போன்ற நாடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர். எனவே, அந்த நாடுகளுக்கு அமெரிக்காவின் நிதியுதவி பெரும் உதவியாக இருக்கும்.

பைடன் கூறுகையில், “இது போலந்து அல்லது ருமேனியா அல்லது ஜெர்மனி நாடுகள் தாங்களாகவே சமாளிக்க வேண்டியது அல்ல. இது ஒரு சர்வதேச பொறுப்பு” என்றார். அவர், ஐரோப்பிய பயணத்தில் அகதிகளை சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

உக்ரைனில் இருந்து வரும் அகதிகளுக்கு அமெரிக்கா அடைக்கலம் தரும் என்று வெள்ளை மாளிகை பல வாரங்களாக கூறி வரும் நிலையில், பெரும்பாலானவர்கள் தங்கள் தாய்நாட்டிற்கு அல்லது கிழக்கு ஐரோப்பாவைச் சுற்றியுள்ள தங்களின் குடும்ப உறுப்பினர்களுடன் இருக்க விரும்புகிறார்கள். அங்கு இருந்தால், நிலைமை சீரானதும் வீட்டுக்கு செல்லலாம் என கருதுகிறார்கள் என அதிகாரிகள் கூறுகின்றனர்.

### எங்கு செல்வார்கள்

அமெரிக்காவில் குடும்பத்தினர் இருப்பவர்கள் முதலில் அகதிகளாக உக்ரைனில் இருந்து வருவார்கள் என பைடன் செய்தி மாநாட்டில் கூறினார்.

அகதிகளை மீட்கும் அமெரிக்காவின் முயற்சியானது, குறிப்பாக ரஷ்ய படையெடுப்பால் பாதிக்கப்பட்ட மக்கள் மீது அதீத கவனம் செலுத்தப்படும்.

அகதிகளாக அமெரிக்காவுக்குள் வர எவ்வித காலக்கெடுவும் விதிக்கவில்லை. இது ஒரு நீண்ட செயல்முறை என கூறும் அதிகாரிகள், 1 லட்சம் பேரும் இந்தாண்டே வர வேண்டும் என்கிற அவசியம் இல்லை என்றார்.

பெரும்பாலான அகதிகள் ஏற்கனவே உக்ரைனியர்கள் அதிக அளவில் வசிக்கும் அமெரிக்காவின் நியூயார்க் நகர பகுதி, பென்சில்வேனியா, சிகாகோ மற்றும் வடக்கு கலிபோர்னியா போன்ற பகுதிகளில் குடியேறுவார்கள் என தெரிகிறது.

### அகதிகள் எண்ணிக்கை

இது வரலாற்றுத் தரவுகளின்படி பெரியது இல்லை. 1980இல் மட்டும் 200,000க்கும் அதிகமான அகதிகளை அமெரிக்கா ஏற்றுக்கொண்டது. அதில் பெரும்பாலானோர் தென்கிழக்கு ஆசியாவை சேர்ந்தவர்கள் ஆவர்.

அதே போல், வெளியுறவுத்துறை புள்ளிவிவரங்களின்படி. 1975-1981 க்கு இடையில் ஏற்றுக்கொண்ட அகதிகள் எண்ணிக்கை 7 லட்சத்து 35 ஆயிரம் என சொல்லப்படுகிறது. ஆப்கானில் இருந்து அமெரிக்க படை வெளியேறியதும், அங்கிருந்து அகதிகளாக வந்த 76 ஆயிரம் ஆப்கானியர்களை அமெரிக்கா ஏற்றுக்கொண்டது. இதில் ஏராளமான முன்னாள் ராணுவ மொழிபெயர்ப்பாளர்களும், அவர்களது குடும்பத்தினரும் உள்ளனர்.

அமெரிக்க பாராளுமன்றத்துடன் கலந்தாலோசித்த நிர்வாகம், 2022 பட்ஜெட் ஆண்டில் அகதிகளின் வரம்பாக 1 லட்சத்து 25 ஆயிரத்தை நிர்ணயித்திருந்தது. அந்த எண்ணிக்கையில், வெளியேற்றப்பட்ட ஆப்கானியர்கள் கிடையாது.

உக்ரைனியர்கள் பலர் மனிதாபிமான அடிப்படையில் கொஞ்சம் நாளும் அல்லது குடும்ப மறுஒருங்கிணைப்புக்காக அமெரிக்காவிற்கு கொண்டு வரப்படலாம் என்பதால், அகதிகள் எண்ணிக்கை வரம்பை உயர்த்தும் எண்ணம் தற்போது இல்லை என நிர்வாகம் தெரிவித்தது.

### பிரதிபலிப்பு என்ன?

ரஷ்ய படையெடுப்பை தொடங்கியதும், அகதிகள் வரவேற்கும் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு அகதிகள் வழக்கறிஞர்கள் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டு வந்தது. ஏனெனில், முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் ஆட்சி காலத்தில் ஏற்பட்ட வேலைத் திட்டக் குறைப்புக்கள் காரணமாக அகதிகள் மீள்குடியேற்ற முகமைகள் கடுமையாக பாதிக்கப்பட்டு வந்த நிலையில், ட்ரம்ப் நிர்வாகம் அகதிகள் சேர்க்கை உச்சவரம்பை 15,000 ஆகக் குறைத்தது.

இந்நிலையில், ஜோ பைடனின் அறிவிப்பை அகதிகள் வழக்கறிஞர்கள் வரவேற்றனர். அமெரிக்காவின் பிரதிநிதி பில் பாஸ்க்ரெல் கூறுகையில், இன்று வரை, , உக்ரைன் அகதிகளை நம்நாடு ஏற்றுக்கொள்ளும் விகிதத்தில் அவசரம் என்பது இல்லாமல் இருந்தது.

ஆனால், பைடனின் 1 லட்சம் அகதிகள் வரவேற்கும் உத்தரவு, இருண்ட தருணத்திற்கு அவசியமான அவசரத்தைக் கொண்டுள்ளது. என்றார்.

உக்ரைன் அகதிகளை வரவேற்பதில் பொதுமக்கள் ஆதரவு அளிப்பதாக கூறப்படுகிறது.அசோசியேட்டட் பிரஸ்-NORC மையத்தின் கருத்துக்கணிப்பின்படி, சுமார் 82 சதவீதம் அமெரிக்கர்கள், உக்ரைன் மக்களை வரவேற்க தயாராக உள்ளனர். - **இந்தியன் எக்ஸ்பிரஸ்**




# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி




**மாதிரிப் பரீட்சை வினாத்தாள்**

39. 3 4 3 = 15 இங்கு ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?

1) x , + 2) + , x 3) x , -

40.



1)  2)  3) 

**01) பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ..........

ii) "நவீன" என்பதன் எதிர்க்கருத்து யாது? ..........

iii) அ.்.றிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

..........

iv) "எழில்" என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..........

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ..........

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ..........

(6 புள்ளிகள்)

02) அ.்.றிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன ii) குடிக்கின்றது iii) விழுகின்றன

(1 புள்ளி)

**03) தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

..........

(1 புள்ளி)

**04) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

**05) பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

**06) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i) நான் .......... (ஆவணி, ஆவனி) மாதம் பிறந்தேன்.

ii) தேசியக்கொடியில் .......... (வால், வாழ், வாள்) ஏந்திய சிங்கம் ஒன்று உண்டு.

ii) நாங்கள் .......... (சுற்றுலா, சுற்றுளா, சுற்றுழா) விற்காகக் கண்டிக்குச் சென்றோம்.

(3 புள்ளிகள்)

**07) பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.**

i) ஆற்றிலே போட்டாலும் ..........

ii) .......... குறுகுறுக்கும். (2 புள்ளிகள்)

**08) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.**

i) பலா கன்று போல பயிர் : ..........

ii) தென்னை ஓலை போல மூங்கில் : .......... (2 புள்ளிகள்)

## விடைகள்

39. 1

40. 2

01. 1) காலிக்கோட்டை 2) புராதன
3) காணப்பட்டன 4) அழகு
5) காலி நகரின் அழகு 6) காலிக் கோட்டை, காலி, கோட்டை

02. விழுகின்றன

03. அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர்.

04. 1) × 2) ✓ 3) × 4) ×

05. ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?

06. 1) ஆவணி 2) வாள் 3) சுற்றுலா

07. 1) அளவறிந்து போடு 2) குற்றமுள்ள நெஞ்சு

08. 1) நாற்று 2) தாள்

## கல்வி tv CHANNEL-1

**28.03.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி tv CHANNEL - 2

**28.03.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# கிழக்கில் எரிவாயு சிலிண்டருக்காக விடியவிடியக் காத்திருக்கும் மக்கள்!

## பலருக்கும் ஏமாற்றமே மிச்சம்





**மட்டக்களப்பு, மார்ச் 28**

**எரிவாயுவைப் பெற்றுக் கொள்வதற்காக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் அதிகாலை 4 மணி முதலே மக்கள் வரிசைகளில் காத்திருக்கின்றனர். ஆயிரக்கணக் கானவர்கள் காத்திருக்கும் நிலையில் சில நூறு பேருக்கு மட்டுமே எரிவாயு சிலிண்டர்கள் கிடைக்கின்றன. இதனால் பெரும்பாலனவர்கள் ஏமாற்றத்துடனேயே திரும்புகின்றனர்.**

மட்டக்களப்பு பைனியர் வீதி, காரைதீவு, நிந்தவூரில் அமைந்துள்ள பிரதான எரிவாயு விற்பனை விநியோக நிலையங்களிலேயே இவ்வாறு மக்கள் கூடுகின்றனர்.

அதிகாலை 4 மணி தொடக்கம் வரிசையில் மக்கள் ஆயிரக்கணக்கானவர்கள் காத்திருக்கும் நிலையில் சில நூறு பேருக்கு மட்டுமே எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்படுகின்றன. இதனால், முகவர்களுடன் மக்கள் முரண்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

இதேவேளை, எரிவாயு விநியோகத்தின் பாதுகாப்புக்காக அந்தப் பகுதிகளில் பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் நிறுத்தப்பட்டுள்ளனர். (ஐ)



## துறைநீலாவணையில் இரத்த தான முகாம்!

மட்டக்களப்பு, மார்ச் 28

மட்டக்களப்பு - துறை நீலாவணையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரத்ததான முகாம் ஒன்று நடத்தப்பட்டது.

துறைநீலாவணை மத்திய விளையாட்டுக் கழகத்தின் சிறந்த விளையாட்டு வீரரான அமரர் யோகராசா கௌதமனின் மூன்றாவது ஆண்டு நினைவாக இந்த இரத்ததான முகாம் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியின் பொறுப்பதிகாரி மருத்துவர் எஸ்.ஆர். சில்வா இவாஞ்சனா தலைமையிலான குழுவினர் குருதி சேகரிப்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இந்த இரத்த தான முகாமில் 100 பேர் வரையிலானோர் பங்கேற்று குருதி தானம் வழங்கினார். (ஐ)

## ஏறாவூர் உள்ளூராட்சி சபைகளின் மூன்று உறுப்பினர்கள் பதவியிழப்பு

ஏறாவூர், மார்ச் 28

ஏறாவூர் நகர சபையின் பிரதித் தவிசாளர் எம். எல். ரெபுபாசம், உறுப்பினரான ஏ. எவ். பஜிஹா மற்றும் ஏறாவூர் பற்று பிரதேச சபையின் உறுப்பினரான எம். எஸ். எம். ஜாஃபர் ஆகியோரின் பதவிக் காலம் முடிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், சிறீ லங்கா சுதந்திரக் கட்சி சார்பில் எம். ரெபுபாசம், ஏ. எவ். பஜிஹா ஆகியோர் போனஸ் ஆசனம் மூலம் ஏறாவூர் நகர சபைக்கு நியமிக்கப்பட்டனர்.

மேற்குறித்த இருவரும், ஏறாவூர் நகர சபை தவிசாளர் தெரிவின் போது கட்சியின் தீர்மானத்தைப் புறக்கணித்தும், கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது கட்சியின் கொள்கை மற்றும் நடவடிக்கைகளுக்கு எதிராகவும் செயல்பட்டதால், சுதந்திரக் கட்சி அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொண்டு, கட்சி உறுப்புரிமையை இரத்துச்செய்து கட்சியில் இருந்தும் வெளியேற்றியது.

ஏறாவூர் பற்று பிரதேச சபையின் மற்றுமோர் உறுப்பினரான எம். எஸ். எம். ஜாஃபர் என்பவரும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கை மற்றும் நடவடிக்கைகளுக்கு எதிராக செயல்பட்டதால், அக்கட்சி அவருக்கெதிராகவும் ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொண்டு, உறுப்புரிமையையும் இரத்துச் செய்தது.

இதன்படி, அவரின் பதவியும் முடிவுறுத்தப்பட்டது.

இவர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட்டமை குறித்து சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, குறித்த உள்ளூராட்சி மன்றங்களின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் விடுத்திருந்தார்.

இதற்கமைவாக, குறித்த உறுப்பினர்கள் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களாக உள்ளமை இல்லாது போனமையால் மேற்படி சபைகளில் அவர்கள் உறுப்பினர் பதவிகளை இழந்துள்ளனர். இது குறித்து தெரிவத்தாட்சி அலுவலரின் அறிவித்தல் வர்த்தமானி பத்திரிகையில் வெளியாகியுள்ளது. (ஐ)

## அக்கரைப்பற்று சிறுமிக்கு உதவி பொருட்கள் அளிப்பு



அக்கரைப்பற்று, மார்ச் 28

அம்பாறை - அக்கரைப்பற்றில் வர்த்தக நிலையம் ஒன்றில் உணவுப் பொருளை களவாடினார் என்று கூறி உரிமையாளரால் சிறுமி ஒருவர் தாக்கப்பட்டிருந்தார். இது தொடர்பான காணொலி சமூகவலைத்தளங்களில் அண்மைநாட்களில் பரவியிருந்தது.

இந்நிலையில், குற்றச்சாட்டுக்குள்ளான சிறுமி மிகவும் வறுமை நிலையில் வாடி வந்தார் என்றும், உரிமையாளரின் தாக்குதலால் சிறுமி கடுமையாகப் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்றும் கூறப்படுகின்றது.

இது தொடர்பிலும் சமூக ஊடகங்களில் தகவல்கள் பரவயிருந்தன. இதையடுத்து பலரால் அந்த சிறுமிக்கு உதவிகள் வழங்கப்பட்டன. இந்நிலையில், புலம்பெயர் நாடுகளில் உள்ள சமூக ஊடக செயல்பாட்டாளர்களான தமிழ் இளைஞர்களால் உருவாக்கப்பட்டுள்ள "வணக்கம் வாழ்க தமிழ்" அமைப்பின் ஊடாக ஒரு தொகை பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மேற்படி அமைப்பின் இலங்கைக்கான ஒருங்கிணைப்பாளர் ஜனா மற்றும சஞ்ஜித் ஆகியோரின் ஏற்பாட்டில் சிறுமிக்கு வீட்டுக்கு தேவையான உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

புலம்பெயர் நாடுகளில் வாழும் நிசாந்தன் மற்றும் அருண் ஆகியோரால் இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

உதவிப் பொருள்கள் சிறுமியின் பெற்றோரிடம் நேரடியாகச்சென்று வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)

## கரைவலையில் சிக்கியது 8 அடி நீளமான முதலை!

திருமலை, மார்ச் 28

திருகோணமலை - சீனன்குடா - கொட்பே பிரதேசத்தில் மீனவர்களின் வலையில் உயிருடன் முதலை ஒன்று சிக்கியதாக மீனவர்கள் தெரிவித்தனர்

சீனக்குடா கொட்பே பிரதேசத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் மீனவர்களால் இழுக்கப்பட்ட கரைவலையிலேயே இவ்வாறு 8 அடிக்கும் அதிக நீளமான முதலை ஒன்று சிக்கியதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு சிக்கிய முதலை குறித்த மீனவர்கள் கரை வலை இழுக்கும்போது வலையில் மாட்டியதாகவும் பின்னர் கரைவலையின் மடிப்பகுதியில் சிக்கி பெரும் சிரமத்திற்கு மத்தியில் மீனவர்களால் விடுவிக்கப்பட்டது.



இது தொடர்பில் திருகோணமலை வனஜீவராசிகள் திணைக்களதுக்கு தகவல் அளிக்கப்பட்டு அந்த முதலை கண்ணியா பெரியகுளம் பிரதேசத்தில் குளத்தில் விடுவதற்காக எடுத்துச்செல்லப்பட்டது. (ஐ)

ஈழநாடு



# விளாடிமிர் புடின் ஒரு சர்வாதிகாரி! அவர் அதிகாரத்தில் நீடிக்க முடியாது!!

## போலந்தில் முழங்கினார் பைடன்


வார்சோ, மார்ச் 28

அமெரிக்க அதிபர் ஜோ பைடன் போலந்தில் ஆற்றிய நீண்ட உரை ஒன்றில் விளாடிமிர் புடினை "சர்வாதிகாரி"என்று வர்ணித்திருக்கிறார்."கடவுளின் பெயரால் இந்த மனிதன் இனியும் அதிகாரத்தில் நீடிக்க முடியாது" என்றும் முழங்கியுள்ளார்.நேட்டோவின் எல்லைக்குள் ஒரு சிறு அங்குலம் தானும் முன்னேறி அடிவைக்க முடியும் என்று எண்ணி விடவேண்டாம் என்றும் அவர் புடினை எச்சரிக்கை செய்தார். அவரது உரை போர்ப் பதற்றத்தை மேலும் விரிவுபடுத்தும் விதமாக அமைந்ததுடன் சர்ச்சைகளையும் எழுப்பியுள்ளது.

ரஷ்யாவில் யார் அதிகாரத்தில் இருப்பது என்பதை பைடன் தீர்மானித்துவிட முடியாது. அது ரஷ்யக் கூட்டமைப்பின் மக்களால் மட்டுமே தீர்மானிக்கப்பட முடியும் - என்று கிரெம்ளின் பேச்சாளர் ஒருவர் உடனடியாகக் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

பைடனின் உரை நிறைவடைந்த கையோடு வெள்ளை மாளிகை வெளியிட்ட ஓர் அறிக்கையில், பைடனின் உரை "நேரடியாக ரஷ்யாவில் ஆட்சி மாற்றத்தைக் கோரவில்லை" (not a direct call for regime change) என்று விளக்கமளிக்கப்பட்டிருக்கிறது.

ரஷ்யாவில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவது எங்கள் நோக்கம் அல்ல என்று அமெரிக்க அதிகாரிகள் கூறிவருகின் றனர். உக்ரைனுக்கான ஆதரவு என்பது" எங்களைப் பொறுத்தவரை ரஷ்யாவில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதல்ல.



தங்களை யார் ஆளவேண்டும் என்பதை ரஷ்ய மக்கள்தான் தீர்மானிக்க வேண் டும்" என்று அமெரிக்க ராஜாங்கச் செய லாளர் அன்டனி பிளிங்கென் இந்த மாத ஆரம்பத்தில் கூறியிருந்தார்.

ஆனால் பைடனின் போலந்து உரை,"புடினைத் தூக்கி எறியுங்கள்" என்று ரஷ்ய மக் களைக் கோரும் விதமாகக் கருதப்படக் கூடியது என்பதால் அது வெள்ளை மாளிகைக்கும் கிரெம்ளினுக்கும் இடையில் நெருக்கடியை உருவாக்கியிருக்கிறது.

பைடனின் உரையில் பெரும் பகுதி ரஷ்ய மக்களுக்கான செய்திகளையே உள்ளடக் கியிருந்தது."ரஷ்ய மக்களே, நான் எப்போதும் உங்களிடம் நேரடியாகவும் நேர்மையாகவும் பேசுகிறேன், நீங்கள் கேட்க முடிந்தால் இதைச் சொல்கிறேன். ரஷ்ய மக்களாகிய நீங்கள் எங்களுக்கு எதிரிகள் அல்லர்.அப்பாவிக் குழந்தைகள் மற்றும் தாத்தா பாட்டிமார் கொல்லப்படுவதை நீங்கள் வரவேற்கிறீர்கள்.. அல்லது மருத்துவமனைகள், பள்ளிகள், மகப்பேற்று வார்டுகள் - கடவுளின் பொருட்டு - ரஷ்ய ஏவுகணைகள் மற்றும் குண்டுகளால் தாக்கப்படுவதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்கள் என்பதை நான் நம்ப மறுக்கிறேன் "- என்று பைடன் தனது உரையில் கூறினார்.

ஜனநாயகத்துக்கும் எதேச் சாதிகாரத்துக்குமான இந்தப் போரில் நாங்கள் உக்ரைனின் பக்கம் நிற்கின்றோம்.முன்பு இருந்திராதவாறு மேற்கு ஐக்கியப்பட்டுள்ளது. ஒரு நீண்ட போருக்குநாங்கள் எங்களைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும் - என்றும் பைடன் கேட்டுக்கொண்டார்.

அதேசமயம் போலந்துத் தலைநகருக்கு வந்துள்ள உக்ரைன் அகதிகளை நேரில் சந்தித்தார் பைடன். அச்சமயம் அவர்க ளோடு உரையாடுகையில் புடினை அவர் "கசாப்புக்கடைக்காரர்" என்று வர்ணித்தார் என ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (அ)



# ரஷ்யாவின் மற்றொரு ராணுவ அதிகாரி உக்ரைனின் தாக்குதலில் மரணம்!

கீவ், மார்ச் 28

உக்ரைனில் இடம்பெற்ற மோதலில் ரஷ்யாவின் 49 ஆவது கூட்டு இராணுவத்தின் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் யாகோவ் ரெசான்ட்சேவ் உக்ரேனியப் படைகளின் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார்.

தெற்கு நகரமான கெர்சன் அருகே நடந்த தாக்குதலில் அவர் கொல்லப்பட்டதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

மற்றொரு லெப்டினன்ட் ஜெனரல் ஆண்ட்ரே மோர்ட்விச்சேவும் இதே தளத்தில் கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் ஒரு மாதத்தைக் கடந்து நீடிக்கும் நிலையில் லெப்டினன்ட் ஜெனரல் யாகோவ் ரெசான்ட்சேவ் உள்ளடங்கலாக இதுவரை ரஷ்யாவின் 7 உயர்மட்ட இராணுவத் தளபதிகள் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஹவுத்தி கிளர்ச்சி குழு பகுதி மீது சவுதி நடத்திய விமான தாக்குதல்!

## 8 பேர் உயிரிழப்பு

நியாத், மார்ச் 28

சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப்படைகள் யேமனில் நடத்திய விமானத் தாக்குதலில் 8 பேர் உயிரிழந்தனர். பெண்கள், குழந்தைகள் உள்பட 4 பேர் படுகாயம் அடைந்தனர்.

சவுதி அரேபியாவின் மிகப் பெரிய அரச எண்ணெய் நிறுவனமான அராம்கொவின் எண்ணெய் கிடங்குகளை குறிவைத்து ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலுக்குப் பதிலடியாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதேவேளை ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலால் ஜூடா நகரில் நடைபெறவிருந்த போர்முலா ஒன் கார் பந்தயப் போட்டி, ஒத்திவைக்கப்பட்டு, வேறு இடத்திற்கு மாற்றப்பட்டது.

சவூதியின் ஜெட்டா நகரில் போர்முலா ஒன் கார் பந்தயம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருந்த நிலையில், அந்த நகரில் உள்ள எரிபொருள் சேமிப்புக் கிடங்கு மீது யேமனின் ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் கடந்த வெள்ளிக் கிழமை தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலில் எரிபொருள் கிடங்கு தீப்பற்றி எரிந்தது. சில வீடுகளும், வாகனங்களும் சேதமடைந்தன. தாக்குதலுக்கு உள்ளான வடக்கு ஜெட்டா எரிபொருள் கிடங்கு, மக்கா புனிதப் பயணம் மேற்கொள்ளும் ஆயிரக்கணக்கான முஸ்லிம் யாத்ரீகர்கள் வந்திறங்கும் ஜெட்டா சர்வதேச விமான நிலையத்துக்கு அருகே தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது.



மற்றொரு தாக்குதல், யேமன் எல்லைக்கு அருகே சவுதி அரேபியாவின் தென்மேற்கு பகுதியில் துணை மின் நிலையத்தை குறிவைத்து நடத்தப்பட்டுள்ளது என சவுதி ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறான நிலையிலேயே ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாக சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப்படைகள் யேமனின் சனா மற்றும் ஹொடைடா ஆகிய இரு நகரங்களில் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து நடத்திய விமானத் தாக்குதலில் 8 பேர் உயிரிழந்தனர்.

யேமனில் அரச படைகளுக்கும், ஹவுத்தி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே உள்நாட்டு போர் நடந்து வருகிறது. இதில் யேமன் அரசுக்கு சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப்படைகள் ஆதரவு அளித்து வருகின்றன.

இந்த கூட்டுப்படையில் ஐக்கிய அரபு எமிரேட்சும் அங்கம் வகிக்கிறது. இதனால் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களுக்கும், சவுதி தலைமையிலான கூட்டு படைகளுக்கும் இடையே மோதல் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)



# பாக். பிரதமர் இம்ரான் கான் மீதான நம்பிக்கையில்லா பிரேரணை இன்று

இஸ்லாமாபாத், மார்ச் 28

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் அரசுக்கு எதிரான எதிர்க்கட்சிகள் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லா தீர்மானம் மீது பாராளுமன்றத்தில் இன்று திங்கட்கிழமை வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் இம்ரான் கட்சியை சேர்ந்த 24 தேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் ஆளுங் கட்சிக்கு எதிராக வாக்களிக்க தயாராக உள்ளதாக வெளியாகியுள்ள தகவல்களால் பாகிஸ்தான் அரசியலில் பெரும் பரபரப்பு நிலவி வருகிறது. இந்நிலையில் "என்ன நடந்தாலும் சரி, நான் பதவி விலகப்போவதில்லை. நான் சண்டையின்றி சரணடைய மாட்டேன். மோசடிக்காரர்களின் அழுத்தம் காரணமாக நான் ஏன் வெளியேற வேண்டும்?" என்று இம்ரான் கான் கேள்வி எழுப்பியுள்ளார்.

எதிர்க்கட்சிகள் அவரை பதவி விலக தொடர்ந்து வலியுறுத்தி வரும் சூழலில், அவரது கூட்டணிக் கட்சியினர் சிலர் எதிர்க் கட்சியுடன் கூட்டணி அமைக்கப் போவதாக தெரிவித்துள்ளனர். இதனால் அவருடைய ஆட்சிக்கு தேவையான பெரும்பான்மைக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் தனிப் பெரும்பான்மைக்கு இம்ரான் கான் அரசுக்கு குறைந்தபட்சம் 172 உறுப்பினர்கள் தேவை. எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து 163 உறுப்பினர்களை கொண்டுள்ளன. இவ்வாறான நிலையில் இம்ரான் கான் நம்பிக்கையில்லா தீர்மானத்தில் வென்று பதவியில் நீடிப்பாரா? என்பது நாளை தெரிய வரும்.

இதற்கிடையே பாராளுமன்றத்தில் தனது அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா வாக்கெடுப்புக்கு முன்னதாக பொதுமக்கள் ஆதரவைத் திரட்டும் நடவடிக்கையில் இம்ரான் கான் ஈடுபட்டுள்ளார்.

தலைநகர் இஸ்லாமாபாத்தில் இன்று இலட்சக்கணக்கான மக்களை ஒன்று திரட்டி மாபெரும் பேரணியை நடத்த அவர் திட்டமிட்டுள்ளார். இந்தப் பேரணியில் பங்கேற்று தனது அரசுக்கான ஆதரவை வெளிப்படுத்துமாறு இம்ரான் கான் அழைப்பு விடுத்துள்ளார்.

பேரணியைத் தொடர்ந்து இஸ்லாமாபாத்தின் பரேட் அவென்யூவில் பொதுக்கூட்டம் மாலை 3 மணிக்கு தொடங்கும். மாலை 4 மணியளவில் இந்தக் கூட்டத்தில் இம்ரான் கான் உரையாற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)



# ரென்னிஸ் தரவரிசை முதலிடத்தில் இகா!

லண்டன், மார்ச் 28

மியாமி ஓபன் ரென்னிஸ் போட்டியில் வென்றதன் மூலம் உலகின் முதல்நிலை வீராங்கனை என்ற புதிய கௌரவத்தை அடைந்தார் போலந்தின் இளம் வீராங்கனை இகா ஸ்வியாரெக்.

அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்டி உலகின் முதல் நிலை வீராங்கனையாக இருந்த நிலையில், 25 வயதிலேயே ஓய்வை அறிவித்திருந்தார்.

இந்நிலையில் அடுத்து, முதலிடத்தை பிடிப்பவர் யார் என்ற எதிர்பார்ப்பு நிலவியது. இந்நிலையில், தற்போது அமெரிக்காவின் மியாமி நகரில் மியாமி ஓபன் போட்டிகள் நடந்து வருகின்றன.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு இரண்டாம் சுற்றுப் போட்டியில் போலந்தின் இளம் வீராங்கனை இகா ஸ்வியாரெக் 6-2, 6-0 என்ற நேர் செற்களில் சுவிஸ் வீராங்கனை விக்ரோறியாவ வீழ்த்தினார்.

இந்த வெற்றியின் மூலம் 20 வயது நட்சத்திரமான ஸ்வியாரெக் உலகின் முதல்நிலை வீராங்கனை என்ற சிறப்பைப் பெற்றார்.

இந்த அந்தஸ்தைப் பெற்ற முதல் போலந்து வீராங்கனை ஸ்வியாரெக் ஆவார். ரத்வன்ஸ்கா இரண்டாம் நிலை வீராங்கனை என்ற சிறப்பை பெற்றுள்ளார்.

கடந்த 2020-இல் பிரெஞ்சு ஓபன் பட்டத்தை கைப்பற்றியதன் மூலம் முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற போலந்து வீராங்கனை என்ற சிறப்பையும் பெற்றார் ஸ்வியாரெக்.

மேலும், டோகா, இந்தியன்வெல்ஸ் ஓப்பன்களின் சம்பியன் பட்டங்களையும் இந்த ஆண்டில் அவர் கைப்பற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மகளிர் உலகக் கிண்ணம்
## அரையிறுதியில் இங்கிலாந்து

வெலிங்டன், மார்ச் 28

மகளிர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் 100 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியை வீழ்த்திய இங்கிலாந்து அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது.

மகளிர் உலகக் கிண்ணத் தொடரின் லீக் சுற்றின் மிக முக்கியமான கட்டத்தில் இங்கிலாந்து, பங்களாதேஷ் அணிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை மோதின. இந்த போட்டியில் வெற்றி பெற்றால் மட்டுமே அரையிறுதிக்குத் தகுதி பெற முடியும் என்ற நிர்ப்பந்தத்தில் களமிறங்கிய இங்கிலாந்து நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடியது.

சோபியா டன்க்லேவின் சிறப்பான ஆட்டத்தால் இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 234 ஓட்டங்கள் எடுத்தது.

அடுத்து களமிறங்கிய பங்களாதேஷ், இங்கிலாந்தின் பந்துவீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்களைப் பறிகொடுத்தது. 48 ஓவர்களில் 134 ஓட்டங்களுக்கு பங்களாதேஷ் அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

இதன்மூலம், 100 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி அரையிறுதிக்கு முன்னேறியது. (ஐ)

# ஐ.பி.எல். இருபது - 20 தொடர் கொல்கத்தா அசத்தல் வெற்றி!

சென்னை, மார்ச் 28

6 விக்கெட்களால் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை வீழ்த்திய கொல்கத்தா அணி ஐ. பி. எல். 15ஆவது தொடரின் முதல் வெற்றியை ருசித்தது. அத்துடன், கடந்த ஆண்டு இறுதிப் போட்டியில் ஏற்பட்ட தோல்விக்கும் பழி தீர்த்தது.

ஐ. பி. எல். என்று அழைக்கப்படும் இந்தியன் பிறீமியர் லீக்கின் இருபது - 20 போட்டித் தொடர் நேற்று முன்தினம் இரவு ஆரம்பமானது.

இதில் முதல் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ், கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணிகள் மோதின. மும்பையில் நடந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொல்கத்தா அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

கொல்கத்தாவின் பந்துவீச்சாளர்கள் மிகச் சிறப்பாக பந்துவீசி நடப்பு சம்பியன் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை 131 ஓட்டங்களுக்கு கட்டுப்படுத்தினர்.

தொடர்ந்து அஜின்கியா ரஹானே, அணித் தலைவர் ஷ்ரேயாஸ் ஐயர் ஆகியோரின் துடுப்பாட்டங்கள் கொல்கத்தாவின் வெற்றியை இலகுபடுத்தின.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜடேஜா தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 131 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

சென்னையின் தொடக்க வீரர்களான கெய்க்வாட் 0, கொன்வே 3 ஓட்டங்கள் என் வேகமாக ஆட்டமிழந்தனர். ஆனால், அனுபவ வீரரும் முன்னாள் அணித் தலைவருமான டோனி ஜடேஜாவுடன் இணைந்து 6ஆவது விக்கெட்டுக்காக 70 ஓட்டங்களை சேர்த்தார். இந்த ஓட்டங்களே அந்த அணியை ஓரளவு போராடும் இலக்கை எட்டவைத்தது.



டோனி 38 பந்துகளில் 7 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 50 ஓட்டங்களுடனும் ஜடேஜா 26 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

இவர்கள் இருவரை விட றொபின் உத்தப்பா 28 ஓட்டங் களைப் பெற்றார். கொல்கத்தாவின் பந்துவீச்சில் உமேஷ் யாதவ் 20 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா 18.3 ஓவர்களில் 4 விக்கெட்களை மாத்திரம் இழந்து 133 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. துடுப்பாட்டத்தில் முன்வரிசை வீரர்கள் அனைவரும் அதிக பட்ச பங்களிப்பை வழங்கி கொல்கத்தாவின் வெற்றியை உறுதிசெய்தனர்.

அஜின்கிய ரஹானே (44), வெங்கடேஷ் ஐயர் (16) ஆகிய இருவரும் பவர் ப்ளேயில் 43 ஓட்டங்களைப் பகிர்ந்து நல்ல ஆரம்பத்தை ஏற்படுத்தினர்.

தொடர்ந்து நித்திஷ் ராணா (21), ஷ்ரேயாஸ் ஐயர்20 ஓட்டங்கள் ஆட்டமழக்காமல் சாம் பில்லிங்ஸ் (25) ஆகியோர் துடுப்பாட்டத்தில் அதிகபட்ச பங்களிப்பை வழங்கியிருந்தனர்.

சென்னையின் பந்துவீச்சில் 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களைக் கைப்பற்றினார் டுவைன் பிராவோ. மொத்தமாக 170 விக்கெட்களைக் கைப்பற்றிய அவர் இந்தியன் பிறீமியர் லீக் அரங்கில் அதிக விக்கெட்களை வீழ்த்திய வீரர் என்ற சாதனையை படைத்தார். முன்னதாக இந்த சாதனையை லசித் மலிங்க வைத்திருந்தார். (ஐ)

# பாகிஸ்தான் டெஸ்ட் தொடர் அவுஸ்திரேலியா அணி வெற்றி!

லாகூர், மார்ச் 28

பாகிஸ்தானுக்கு எதிராக லாகூர் கடாபி விளையாட்டரங்கில் நடைபெற்ற கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 115 ஓட்டங்களால் வெற்றியீட்டிய அவுஸ்திரேலியா, 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1 - 0 என்ற கணக்கில் தனதாக்கியது.

பாகிஸ்தானில் 1998ஆம் ஆண்டுக்குப் பின்னர் அவுஸ்திரேலியா டெஸ்ட் தொடர் வெற்றியை ஈட்டியது இதுவே முதல் தடவையாகும். 24 வருடங்களுக்கு முன்னர் மார்க் ரெய்லர் தலைமையிலும் 1 - 0 என்ற தொடர் வெற்றியே அவுஸ்திரேலியாவுக்கு கிடைத்திருந்தது. அத்துடன், 2016க்குப் பின்னர் அந்நிய மண்ணில் அவுஸ்திரேலியா ஈட்டிய முதலாவது டெஸ்ட் தொடர் வெற்றியாகவும் இது அமைந்தது. அது மட்டுமல்லாமல் ஆசியாவில் 11 வருட வெற்றி தாகத்தையும் அவுஸ்திரேலியா தீர்த்துக்கொண்டது.

உஸ்மான் கவாஜாவின் அற்புதமான துடுப்பாட்டம், அணித் தலைவர் பட் கம்மின்ஸ், நதன் லயன் ஆகிய இருவரும் பதிவு செய்த 5 விக்கெட் பெறுதிகள் என்பன அவுஸ்திரேலியாவுக்கு மகத்தான வெற்றியையும் தொடர் வெற்றியையும் ஈட்டிக்கொடுத்தன.

இவர்களைவிட ஸ்ரீவன் ஸ்மித், கெமரூன் கிறீன், டேவிட் வோர்ணர் ஆகியோர் பெற்ற அரைச் சதங்களும் அவுஸ்திரேலியாவுக்கு வலு சேர்த்துக்கொடுத்தன.




351 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கு அல்லது 121 ஓவர்களைத் தாக்குப்பிடிப்பது ஆகிய இரண்டுமே லாகூரில் இதற்கு முன்னர் சாதிக்கப்பட்டதாக சரித்திரம் இல்லை. போட்டியின் கடைசி நாளான வெள்ளிக்கிழமை தனது 2ஆவது இனிங்ஸை விக்கெட் இழப்பின்றி 73 ஓட்டங்களிலிருந்து தொடர்ந்த பாகிஸ்தானின் வெற்றிக்கு மேலும் 278 ஓட்டங்கள் தேவைப்பட்டது.

இரண்டாவது டெஸ்ட் போட்டியில் கிட்டத்தட்ட 11 மணித்தியாலங்கள் துடுப்பெடுத்தாடி 450க்கும் மேற்பட்ட ஓட்டங்களைக் குவித்த பாகிஸ்தான் இந்த டெஸ்ட் போட்டியில் சாதிக்கும் என பரவலாக எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், 5ஆம் நாள் ஆட்டத்தின் முதலாவது பகுதியில் அப்துல்லா ஷிபிக், அஸார் அலி ஆகிய இருவரது விக்கெட்ளை இழந்த பாகிஸ்தான் பகல் போசன இடைவெளையின்போது 2136 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இடைவேளைக்குப் பின்னர் 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 3 விக்கெட்களை இழந்த பாகிஸ்தான் பலத்த நெருக்கடிக்கு மத்தியில் தேநீர் இடைவேளையை எதிர்கொண்டது.

இமாம்-உல்-ஹக், பவாட் அலாம், மொஹமத் றிஸ்வான் ஆகியோரே 27 ஓட்ட இடைவெளியில் ஆட்டமிழந்தவர்களாவர். தேநீர் இடைவேளையின்போது 5 விக்கெட்களுக்கு 190 ஓட்டங்களைப் பெற்றிருந்த பாகிஸ்தான், கடைசி 5 விக்கெட்களை 52 பந்துகளில் 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இழந்தபோது அதன் 2ஆவது இனிங்ஸ் 235 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. (ஐ)

# ராஜபக்கஷக்களுக்கு எதிரான எவருடனும் செயலாற்ற தயார்!

## சம்பிக்க ரணவக்க எம். பி.

கொழும்பு, மார்ச் 28

ராஜபக்ஷக்களுக்கு எதிராக செயல்படக்கூடிய எந்த அரசியல் கட்சிகளுடனும் இணைந்து செயல்படத் தயார் என 43 ஆவது படையணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க அறிவிப்பு விடுத்துள்ளார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவில் உள்ளவர்கள் அல்லது சிறீ லங்கா சுதந்திரக் கட்சி என ராஜபக்ஷக்களை எதிர்க்கும் எவருடனும் இணைந்து செயல்படத் தயார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது ஆட்சியில் உள்ளவர்களை வெளியேற்றுவதற்குப் பெரும் கூட்டணி ஒன்றை அமைப்பது காலத்தின் தேவை. அதனால், புதிய கூட்டணி ஒன்றை உருவாக்குவதற்கு நாம் எந்தவொரு கட்சியுடனும் இணைந்து செயல்படத் தயாராக இருக்கிறோம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்த்தன, எங்களின் அழைப்பை ஏற்று 43ஆவது படையணி மாநாட்டில் கலந்துகொண்டிருந்தார். இதனாலேயே கடந்த வெள்ளிக்கிழமை ஐ.தே.க. ஏற்பாடு செய்த சத்தியாகிரகத்தில் கலந்துகொள்ள தீர்மானித்துள்ளோம். மக்கள் விடுதலை முன்னணி, சிறீ லங்கா சுதந்திரக் கட்சி ஆகியக் கட்சிகளின் ஆர்ப்பாட்டங்களிலும் எதிர்காலத்தில் கலந்துகொள்வோம் - என்றார். (ஐ)

# அம்புலன்ஸ் மோதியதில் 17 வயது மாணவி மரணம்!

பதுளை, மார்ச் 28

அம்புலன்ஸூம் மோட்டார் சைக்களும் மோதிய விபத்தில் பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பதுளை - தியத்தலாவையில் நில அளவை அலுவலகம் முன்பாக இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற படுகாயமடைந்த 17 வயது மாணவி தியத்தலாவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திய 29 வயதுடைய நபர் தியத்தலாவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

பண்டாரவளை வைத்தியசாலையில் இருந்து நோயாளியை ஏற்றிக் கொண்டு தியத்தலாவை வைத்தியசாலைக்குச் சென்று கொண்டிருக்கையில் அம்புலன்ஸை மோட்டார் சைக்கிள் முந்திச் செல்ல முற்பட்டபோதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

அம்புலன்ஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தடையில்லா மின்சாரம் வழங்குதற்குள்ள தடைகளை நீக்க நடவடிக்கை எடுங்கள்!

## பிரதமர் மஹிந்த அதிகாரிகளுக்கு பணிப்பு

**கொழும்பு, மார்ச் 28**

**மின்சார நெருக்கடிக்கு தீர்வாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை பயன்படுத்துவதில் உள்ள தடைகளை உடனடியாக நீக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்டச் செயல்படுத்துகை அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்டவுக்கு பணித்துள்ளார்.**

அலரி மாளிகையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயல்படுத்துகை அமைச்சின் முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தின் போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார்.

இந்த அமைச்சகத்திற்குரிய தேசிய திட்டமிடல் துறை, மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், கொள்கை கற்கைகள் நிறுவனம், நிலையான அபிவிருத்தி சபை, கட்டுபாட்டாளர் நாயகம் அலுவலகம், மதிப்பீட்டுத் திணைக்களம், இலங்கை கணக்குகள் மற்றும் தணிக்கை தரநிலைகள் கணக்கெடுப்பு, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் பயனாளிகள் சபை ஆகிய நிறுவனங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

எரிபொருளை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் ஒரு அலகு மின்சாரத்திற்கு 60 ரூபாய்க்கு மேல் செலவாகும் என்றும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் உற்பத்தி செய்யப்படும் ஓர் அலகு மின்சாரம் குறைந்தபட்சம் 20 ரூபாய்க்குக் கிடைக்கும் என்றும் தெரிய வந்தது.



இதற்கமைய மின் நெருக்கடியைத் தீர்க்க புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை தவிர வேறு வழியில்லை என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தமித் குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

2030 ஆண்டளவில் தேவை ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ள 28,200 ஜிகாவோட்ஸ் மணிநேரத்தில், 19,800 கிகாவோட்ஸ் மணிநேரம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள் மூலம் பெற்றுக்கொள்ளும் தற்போதைய அரசாங்கத்தின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை அறிக்கையில் கூறப்பட்டுள்ள 70சதவீத புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை பயன்படுத்துவதற்கு தற்போது அமுலிலுள்ள மின்சார சபையின் 1969 சட்டத்தை திருத்தி தற்போதைய சூழலுக்கு ஏற்றவாறு சீரமைக்க வேண்டும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அதிகாரிகள் இதன்போது தெரிவித்தனர்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை பிரதான விநியோகத்துடன் இணைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதில் இலங்கை மின்சார சபையின் செயல்பாடுகள் தாமதிக்கப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

எவ்வாறாயினும், தற்போதைய மின் நெருக்கடிக்கு உடனடி தீர்வு காணப்பட வேண்டும் எனவும், மின்சார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தடையில்லா மின்சாரம் விரைவில் வழங்கப்பட வேண்டும் எனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (ஐ)

# போதைப் பொருள் குற்றங்கள் 95,000 பேர் கடந்த ஆண்டு கைது!

கொழும்பு, மார்ச் 28

கடந்த 2021ஆம் ஆண்டுமுதல் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் இணைந்து மேற்கொண்ட போதைப் பொருள் சுற்றிவளைப்புகளில் 95 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று, பிரதி பொலிஸ்மா அதிபரும் சிரேஷ்ட பொலிஸ் ஊடக பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த விசேட காணொலிப் பதிவிலேயு அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், “இதன்போது 1,630 கிராம் ஹெரோய்ன், 15,000 கிலோ கஞ்சா என்பவை கைப்பற்றப்பட்டுள்ளன. இதேபோன்று 377 கிலோ நிறையுடைய ஏனைய போதைப் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த வருடத்தில் ஜனவரி முதலாம் திகதி முதல் இது



வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட போதைப் பொருள் சுற்றிவளைப்புகளில் 800 பேர் கைதுசெய்யப்பட்டுள்ள னர். அத்துடன், 360கிராம் ஹெரோயின், 2,100 கிலோ கஞ்சா, 18 கிலோ நிறையுடைய ஏனைய போதைப் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபடுபவர்களின் வலையமைப்பு தொடர்பில் விசேட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

போதைத் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வருபவர்கள் கைதுசெய்யப்படும்போது அவர்களின் சொத்துக்கள் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இலங்கையிலிருந்து தப்பிச் சென்று சர்வதேச ரீதியில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் 130 பேருக்கு எதிராக சர்வதேச பொலிஸ் சிவப்பு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

சித்திரை புதுவருட பிறப்புக் காலத்தில் போதைப் பொருள் சுற்றிவளைப்புகளை பெரியளவில் நடத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபடுவர்கள் தொடர்பில் தகவல் வழங்குபவர்களுக்கும் சன்மானங்களை வழங்குவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்“ என்றும் அவர் தெரிவித்தார். (கே)

# சுதந்திரக் கட்சியினர் அமைச்சு பதவியை துறந்தால் நானும் தயார்!

## அமைச்சர் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, மார்ச் 28

“சிறீ லங்கா சுதந்திரக் கட்சியினர் அமைச்சுப் பதவிகளில் இருந்து விலகி முன்னுதாரணமாக செயல்பட்டால், நானும் அமைச்சுப் பதவியை துறந்து, மொட்டு கட்சி தரப்பில் இருந்து முன்மாதிரியாகச் செயல்படத் தயார்.”

- இவ்வாறு விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது: -

“அமைச்சரவையிலுள்ள அமைச்சர்களின் எண்ணிக்கையை மேலும் குறைக்குமாறு மைத்திரிபால சிறிசேன யோசனை முன்வைத்துள்ளார். முதலில் சுதந்திரக் கட்சியின் அமைச்சு பதவியில் இருந்து விலகி, முன்னுதாரணமாக செயல்படட்டும். அதன்பின்னர் நான் பதவி துறப்பேன்” - என்றார். (ஐ)

## மின்னல் தாக்கியதில்

# மரணச் சடங்கில் பங்கேற்ற சிறுவர் உட்பட 25 பேர் காயம்!

கொழும்பு, மார்ச் 28

மயானம் ஒன்றில் மின்னல் தாக்கியதில் சிறுவர்கள் உள்ளிட்ட 25 பேர் காயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இறுதிச் சடங்கு இடம்பெற்றுக்கொண்டிருந்த சந்தர்ப்பத்திலேயே மின்னல் தாக்கியுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கேகாலை மாவட்டம் -மாவனெல்லை - பெமினிவத்தை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் இவர்களில் சிறுவர்களும் அடங்குவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## சர்வதேச...

நான்கு குற்றச்சாட்டுக்களை சுமத்தி வெளியிடப்பட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு,

கடந்த காலங்களில் ராஜபக்ஷ அரசோடு நடத்திய பேச்சுக்களை தங்களுக்கு சார்பாக அவர்கள் கையாண்ட அனுபவங்களையும் சுட்டிக் காட்டியிருந்தோம். எமது தரப்பில் அரசாங்கத்தோடு பேசித்தான் தமிழர்களுக்கு தீர்வு காணவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடும் எதிர்பார்ப்புகளோடும் நாங்கள் கலந்து கொள்ளும் பேச்சுக்களை தங்கள் நிகழ்ச்சி நிரலுக்குள் முடக்கி விடக்கூடிய ஆபத்து இருப்பதிலும் அச்சம் கொண்டிருந்தோம். இருப்பினும் எமது அங்கத்துவ கட்சிகள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டன.

இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு அரசியல் பிரச்னை இருப்பதை அரச தரப்பு ஏற்றுக் கொள்ளாத நிலையில் அதிகாரப் பகிர்வு மற்றும் அரசியல் தீர்வு விடயமாக நாம் எதிர்பார்த்த கருத்துக்களையே அரசு தெரிவித்திருந்தது. அதை நிறைவேற்ற முடியாத நிலைமையில் அரசு இப்பொழுது இருப்பதையும் நாங்கள் நன்கு அறிவோம். இதற்கு பின்னராக நாம் முன்மொழிந்த முக்கிய நல்லிணக்க கோரிக்கைகள் உள்ளடங்கலாக சில விடயங்களை நிறைவேற்றுமாறு எமது அங்கத்துவ கட்சிகள் அரசை கோரியிருந்தனர். இதை அரசு கையாள முற்பட்டுள்ள முறையில் நாங்கள் மிகுந்த கவலையும் கரிசனையும் கொண்டுள்ளோம்.

அரசு எதிர்கொண்டிருக்கும் சர்வதேச விசாரணை மற்றும் நீதி பொறிமுறையை நீர்த்துப்போக வைக்கும் நடவடிக்கையாக சில உறுதிமொழிகளை வழங்கி இருப்பது ஆபத்தானவையாக இருக்கின்றன. நல்லிணக்க கோரிக்கைகளை நிறைவேற்றுவது போல கூறிக்கொண்டு எமது மக்களின் நீண்டகால முயற்சிக்கு பின்னர் தற்பொழுது ஐ. நாவில் முன்னெடுக்கப்படும் நீதிப் பொறிமுறையை அரசு தவிடுபொடியாக்க இடமளிக்க முடியாது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சம்பந்தமாக அரச தரப்பில் விசாரணையை ஆரம்பிக்க இருப்பதாக தெரிவித்திருப்பது சர்வதேச விசாரணையை நீர்த்துப்போக வைக்கும் செயலாகும்.

மனித உரிமைகள் மீறல்கள், யுத்தக் குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை என்பவற்றுக்கு ஆதாரமாக இருப்பது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயமாகும். இன்று சர்வதேச நீதி பொறிமுறைக்கு கொண்டு செல்வதற்கு ஆதாரங்களை திரட்டும் நடவடிக்கையில் ஐ. நாவும் அதற்கான பலமான கோரிக்கைகளில் எமது தரப்பும் ஈடுபட்டு வருகிறோம். அப்படியான சர்வதேச நீதிப் பொறிமுறைக்கு ஆதாரங்களைத் திரட்டுவது சம்பந்தமாக அரசின் நல்லிணக்க வெளிப்பாடுதான் எம்மக்களுக்கு நலன் தரும் பிரதான அம்சமாகும். அதைவிடுத்து அதற்குத் தீர்வாக தாங்கள் உள்ளக விசாரணைகளை ஆரம்பிக்கிறோம் என்று அரசு உறுதி மொழி வழங்கியிருப்பது காணாமல் ஆக்கப்பட்டவர்களுகான நீதியை இல்லாமல் ஆக்குகின்ற செயலாகும். அதற்கான சர்வதேச, ஐ. நா. மற்றும் எமது முயற்சிகளை நீர்த்துப்போக வைக்கும் நடவடிக்கையாகும். சர்வதேச நீதிப் பொறிமுறைக்கு முன் இலங்கை அரசை பாரப்படுத்த வேண்டும் என்று நாங்கள் பலமான கோரிக்கைகளை சர்வதேசத்திற்கு முன்வைத்து கொண்டு அரசின் உள்ளக விசாரணை என்ற பொறிக்குள் அகப்பட்டுக் கொள்ள முடியாது.

இரண்டாவதாக அரசியல் கைதிகள் விடுதலை சம்பந்தமாக நீதி அமைச்சரை கொண்ட குழு ஒன்றை அமைத்து கைதிகள் விடுதலை சம்பந்தமாக சட்ட விடயங்களை பரிசீலிப்பதாக அரசு உறுதிமொழி வழங்கியிருக்கிறது. இதே நீதி அமைச்சர் இந்நாட்டில் அரசியல் கைதிகள் இல்லை என்று ஊடகங்களிலும் பாராளுமன்றத்திலும் உரையாற்றி தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியவர். இவ்விடயம் சட்ட ரீதியான முடிவை கடந்து அரசியல் ரீதியாக எட்டப்படும் முடிவே அவசியம். ஜனாதிபதியின் அதிகாரத்தின் கீழ் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்ட அரசியல் கைதிகள் மாத்திரமல்ல ஆதாரமின்றி தடுத்து வைக்கப்பட்டு இருப்பவர்களும், அண்மையில் அரசியல் காரணங்களுக்காக, கைதுசெய்யப்பட்ட, நூற்றுக்கணக்கான குற்றங்கள் ஏதும் இழைக்காத குற்றங்கள் சாட்டப்படாமல் தடுத்து வைத்திருப்பவர்களையும் விடுதலை செய்ய முடியும்.

இந்தச் சூழ்நிலையில் விடுதலைக்கான நல்லிணக்க அறிவிப்பை மேற்கொள்ள அரசு தயாரா இல்லை. எமது தரப்பிலும் ஒருவரை நீதி அமைச்சரோடு இணைத்து தங்கள் தவறுக்கு எமது தரப்பையும் பங்காளிகள் ஆக்க முனைகிறார்கள்.

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை என்பது நீதியின் அடிப்படையில் இதுவரை காலமும் முடியாத விடயமாகவே உள்ளது. பொது மன்னிப்பின் அடிப்படையில் அரசியல் காரணங்களுக்காக கைது செய்யப்பட்டவர்கள் அனைவரையும் விடுதலை செய்வதே நல்லிணக்க நடவடிக்கையாக கருத முடியும். உதாரணமாக குற்றங்கள் யுத்த குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றில் ஈடுபட்ட அரசுக்கு தேவையான பலர் ஜனாதிபதியின் தன்னிச்சையான முடிவிலையே விடுவிக்கப்பட்டதை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

மூன்றாவதாக காணி அபகரிப்பு, குடிப்பரம்பல் சிதைப்பு ஆகிவற்றை தடுத்து நிறுத்துதல் சம்பந்தமான கோரிக்கைக்கு அரசு நழுவல் போக்கில் பதில் அளித்துள்ளது. தங்களுக்கு அதைப்பற்றி தெரியாதென்றும் அப்படி ஏதும் நடந்தால் தற்காலிகமாக நிறுத்துவதாகவும் கூறியிருக்கிறார்கள். காணி அபகரிப்பு சம்பந்தமாக உரிய ஆதாரங்கள் பல்வேறு தமிழர் தரப்பினராலும் திரட்டப்பட்டு இருந்த நிலையில் அவை சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை என்பதை அவதானிக்கிறோம். பாதுகாப்பு அமைச்சினால் மாத்திரமல்லாமல் பல்வேறு திணைக்களங்கள், பொறிமுறைகளின் ஊடாக பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணி கையகப்படுத்தப்பட்டு இருக்கிறது. பிரதான பங்காற்றும் தொல்லியல் ஆணைக்குழுவை உடனடியாகக் கலைப்பது என்பது உட்பட பல முக்கிய விடயங்கள் தவிர்க்கப் பட்டுள்ளன. இதுவரைகாலமும் கையகப்படுத்தப்பட்ட காணிகளின் விடுவிப்பு சம்பந்தமாக எதுவும் பிரஸ்தாபிக்க பட்டிருக்கவில்லை.

கடந்த செப்ரெம்பர் மாதம் **2021** ஐ.நா. உயர்ஸ்தானிகருக்கு **5** தமிழ் தேசியக் கட்சிகள் ஒருமித்து அனுப்பிய கடிதத்தில் மிகக்குறுகிய **6** மாத காலத்துக்குள் நடைபெற்ற காணி அபகரிப்புக்களை ஆதாரத்தோடு சமர்ப்பித்து இருந்தோம். அவை இவ்வருட பெப்ரவரி மாத ஐ. நா. உயர்ஸ்தானிகரால் பிரதான விடயமாக அறிக்கையில் சுட்டிக்காட்டபட்டுள்ளது. காணி அபகரிப்பு சம்பந்தமாக கடந்த மனித உரிமைகள் பேரவையில் பிரித்தானியா மற்றும் அமெரிக்காவுக்கான வதிவிடப் பிரதிநிதிகள் தமது அக்கறையை தெரிவித்திருந்தார்கள். சர்வதேசத்தின் அவதானத்திற்கு கொண்டுவரப்பட்டு இருக்கும் இவ்விடயங்களை அரசு திசை திருப்புவதாக அச்சம் கொள்கிறோம். அதிகாரப் பகிர்வின் மூலமே இதை தடுத்து நிறுத்த முடியும் என்பதில் நாம் மாறாத நிலைப்பாட்டில் உள்ளோம்.

நான்காவதாக மத்திய அரசின் கட்டுப்பாட்டில் பொது நிதியத்தை ஏற்படுத்தி வடக்கு, கிழக்கின் அபிவிருத்திக்காக புலம்பெயர் உறவுகளின் நிதியை பெற்றுக் கொள்ளும் வழிமுறை என்பது ஆட்டைப் பிடித்து ஓநாயின் குகைக்குள் விட்ட கதையாகி விடும். மத்திய அரசு தனது எண்ணப்படியே அந்த நிதியை பயன்படுத்தும். அதிகாரப் பகிர்வு ஊடாக ஏற்படுத்தப்படும் கட்டமைப்பின் கீழ் உருவாக்கப்படும் பொது நிதியம்தான் தமிழ் தேசியத்திற்கான தற்சார்பு பொருளாதாரத்தை கட்டி வளர்ப்பதற்கு உதவும். மேலும் அதிகாரப் பகிர்வை கோரி நிற்கும் தமிழினம் அபிவிருத்திக்கான நிதியத்தை மத்திய அரசாங்கத்திடம் கையளிப்பது எமது கோரிக்கைக்கு நேர் எதிரானது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வே எமது நிலைப்பாடாகும். ஏற்கனவே அரசியல் யாப்பில் இருக்கும் விடயங்களை முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்தும் நல்லிணக்க கோரிக்கையை அரசாங்கத் தரப்பு புதிதாக வெளிவரவிருக்கும் அரசியல் யாப்பு நிபுணர் குழுவின் அறிக்கையுடன் பிணைப்பது ஆபத்தானதாகும்.

புதிய அரசியல் யாப்புக்கான நிபுணர் குழுவின் பரிந்துரையுடன் ஏற்கனவே அரசியல் யாப்பில் உள்ள விடயங்களை பிணைப்பது என்பது எமது சமஷ்டி முறையிலான கோரிக்கையை இல்லாதொழிப்பதாகவே அமையும். ஏற்கனவே அரசியல் யாப்பில் இருக்கின்ற, நாம் தீர்வாக ஏற்றுக் கொள்ளாத விடயங்களை, புதிய அரசியல் யாப்பில் எமது அரசியல் தீர்வாகத் திணிக்கும் சூழ்ச்சியாக அமைந்துவிடும்.

நிபுணர் குழுவின் புதிய அரசியல் யாப்பை நிறைவேற்ற பாராளுமன்ற பலத்துடனோ அல்லது மக்கள் ஆதரவுடனோ அரசாங்கம் இல்லை. இந்த நிலையில் ஏற்கனவே அரசியல் யாப்பில் உள்ள விடயங்களை முற்றுமுழுதாக அரசாங்கம் நிறைவேற்றுவதுதான் தமிழ்மக்கள் எதிர்கொண்டிருக்கும், நாம் மேலே குறிப்பிட்ட, காணி மற்றும் அபிவிருத்தி விடயங்களில் ஓரளவேனும் நிவாரணமாக அமையும். இது தீர்வுக்கான அரசின் நல்லிணக்க நடவடிக்கையாக அமையவேண்டுமே தவிர தீர்வாக ஏற்க முடியாது.

கடந்த காலங்களில், தாம் எதிர்கொள்ளும் சர்வதேச மற்றும் உள்ளக நெருக்கடிகளில் இருந்து தப்புவதற்காக பேரினவாத அரசுகள் எம்மை பயன்படுத்தி வந்த வரலாறுகளையும் கருத்தில்கொண்டு, எமது கடந்தகால அனுபவங்களின் அடிப்படையிலும் சந்தர்ப்பங்களை சரியான முறையிலும் பக்குவமாகவும் எமது இனம் சார்ந்து கையாள வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு -என்றுள்ளது. (ஐ)

## இன்று வருகிறார்...

வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் மூன்றுநாள் பயணமாக இலங்கை வருகின்றார்.

இந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை இன்று மாலை 4.30 மணிக்கு சந்தித்துப் பேசுவார் என்று கூட்டமைப்பின் பேச்சாளரான பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார். (ஐ)

## இலங்கை...

நிபுணர்களும் ஐக்கிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

முன்மொழியப்பட்ட அந்தத் திருத்தங்களை உடனடியாக நிறைவேற்றவேண்டும் என்பதற்காக, மனித உரிமைகள் அமைப்புக்களின் ஆலோசனைகளுக்கு இடமளிக்கக்கூடியவாறான உபகுழு ஆராய்வை அரசாங்கம் தவறவிட்டுள்ளது. இதன் விளைவாக அந்தச் சட்டத்தை சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கு அமைவாக மாற்றியமைக்கக் கூடியவாறான முக்கிய சந்தர்ப்பம் நழுவவிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் கடந்த நான்கு வருடகாலமாக நபர்களைத் தன்னிச்சையாகத் தடுத்துவைப்பதற்கும் சித்திரவதைகளுக்கு உட்படுத்துவதற்கும் சிறுபான்மையினத்தவர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளை இலக்குவைப்பதற்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்திவந்திருக்கின்றது.

தற்போது அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாட்டிற்கும் பணவீக்கத்திற்கும் வழிவகுத்திருக்கக்கூடிய கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் முறையற்ற பொருளாதார நிர்வாகத்திற்கு எதிராகப் பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இப்போது இடம்பெற்றுவரும் மீறல்கள் தொடர்பில் பல்வேறு அழுத்தங்களுக்கு உள்ளாகியிருக்கக்கூடிய அரசாங்கம், சர்வதேசத்திடமிருந்து நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக மனித உரிமைகள் விவகாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதுபோன்று காண்பிக்க முயற்சிக்கின்றது- என்றும் குறிப்பிட்டுள்ளது.

## ஜனாதிபதியுடன்...

சோ. சேனாதிராசா.

தந்தை செல்வா நினைவு விருது வழங்கும் நிகழ்வு நேற்று மாலை பண்டத்தரிப்பு வை. எம். எச். ஏ. மண்டபத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

தந்தை செல்வா காலம் முதலே சமஷ்டி ஆட்சிமுறையை தமிழர்கள் வலியுறுத்தி வருவதை நினைவூட்டியதோடு, அதன் அவசியத்தையும் தமிழர் பிரச்னையை இதன்மூலமே தீர்க்க முடியும் என்று வலியுறுத்தினோம். **13**ஆவது திருத்தச் சட்டம் மூலம் காணி, பொலிஸ் அதிகாரம் தரப்பட வேண்டும் என்று அழுத்திக் கூறியுள்ளோம். இந்த விடயம் குறித்து **3** மாதத்துக்குள் தீர்வு தருவார் என்று ஜனாதிபதி எமக்கு உத்தரவாதம் அளித்திருக்கிறார் - என்றார். (ஐ-5)

## கூட்டமைப்பு...

தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

அத்துடன், பேச்சில் ஈடுபடும் இரு தரப்பினருக்கு இடையில் நம்பிக்கை கட்டியெழுப்பப்பட்டு இதயசுத்தியுடன் தொடரவேண்டும் என்பதே தமது எதிர்பார்ப்பாக உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

கூட்டமைப்பு - ஜனாதிபதி பேச்சு தொடர்பில் அவர் கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தனிப்பட்ட முறையில் அனைத்துப் பிரச்னைகளுக்கும் பேச்சுகளின் ஊடாக இணக்கப்பாடுகளும் புரிதல்களும் ஏற்பட்டு விட்டுக்கொடுப்புக்களுடன் தீர்வுகள் எட்டப்படுவதே சிறந்தவொரு விடயம் என்ற நிலைப்பாட்டை நான் கொண்டிருக்கின்றேன்.

முன்வைக்கப்படும் நிபந் தனைகள் நடைமுறைச் சாத்தியமானவை யாகவும் தென்னிலங்கையில் உள்ள கடுப்போக்காளர்களை விடவும் முற்போக்கானவர்களை காயப்படுத்துவதாக அமையாத வண்ணமிருப்பது மிகவும் கரிசனைக்குரிய விடயமாகின்றது - என்றார்.

## ஆளும் கட்சியின்...

என்று கூறப்படுகின்றது.

சந்திம வீரக்கொடி அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்து வருகின்றார். அதிருப்தி காரணமாக நிமல் லான்சா அண்மையில் இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து விலகினார். சுசில் பிரேமஜயந்த அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பண்பாட்டு...

இன்று திங்கட்கிழமை திறப்பு நிகழ்வு நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். இதற்கான ஒத்திகை நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன.

யாழ்ப்பாண கலாசார நிலையம் என்று முன்னர் பெயர் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், யாழ்ப்பாணத்தில் உள்ள மொழி ஆர்வலர்கள் யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் ஊடாக யாழ்ப்பாணப் பண்பாட்டு மையம் என்ற பெயரை பயன்படுத்துமாறு முன்வைத்த கோரிக்கைக்கு அமைய யாழ்ப்பாணப் பண்பாட்டு மையம் என்ற பெயர் நடைமுறைக்கு வந்துள்ளதாகத் தெரிய வருகின்றது. (ஐ)

**வாடகைக்கு வீடு தேவை**

நல்லூர் கோவிலுக்கும் கச்சேரியடிக்கும் இடைப்பட்ட, இரண்டு கிலோமீற்றர் சுற்றுவட்டாரத்திற்குள், நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு, வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு:

**077 546 5577**

ஈழநாடு
Eelanadu

# கடன் வாங்கி நாட்டை அழித்தது மஹிந்த தலைமையிலான அரசே!

## எரான் விக்ரமரத்ன எம். பி. சாடல்

கொழும்பு, மார்ச் 28

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கமானது கடன்வாங்கியே இந்த நாட்டை சீரழித்தது. கடன் வாங்குவதில் பிரச்னையல்ல. வாங்கும் கடனை எவ்வாறு பயன்படுத்தப்போகின்றோம் என்பதிலேயே பிரச்னை உள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

எதிர்க் கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார். இதன்போது தொடர்ந்துரைத்த அவர்,

சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி வேலைத்திட்டங்களை செயற்படுத்தும்போது நுற்றுக்கு 2.5 வீதம் டொலர் கிடைக்கலாம். ஆனால் நூற்றுக்கு எட்டரை சதவீதம் கடன் வாங்கியுள்ளனர். இந்தத் தொகைக்கு கடனை பெறுவார்களாயின் அந்தக் கடன் தொகையை கொண்டுவந்து வெள்ளை யானையை தயாரிப்பதற்காக செலவிடுவார்களா?

மாநாட்டு மண்டபங்கள், கிரிக்கெட் விளையாடாத கிரிக்கெட் மைதானங்கள், கப்பல் வராத துறைமுகங்கள், விமானங்கள் தரையிரங்காத விமான நிலையங்களை அமைத்தனர். இலாபம் இல்லாத அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தனர். கடனை வாங்குவதால் பிரச்னையல்ல அதனை எவ்வாறு பயன்படுத்துவது என்பதிலேயே பிரச்னை உள்ளது.

சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கை 95 பக்கங்களுக்கு அச்சிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் கூறப்படுகின்ற பொருளாதார காரணிகளை நாம் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்திலும் ஒரு வருடங்களுக்கு முன்பிருந்தே கூறி வருகின்றோம். இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள உண்மைகள் நாங்கள் ஏறகனவே கூறிய விடயங்களாகவே உள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவானதுடன் அரசாங்கத்தின் வருமான மார்க்கமான வரியை ஒரேதடவையில் இல்லாமல் செய்ததே நாட்டின் பொருளாதார நெருக்கடி ஏற்பட பிரதான காரணம் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எந்தவித விஞ்ஞானபூர்வமான திட்டமிடலுமின்று வரி இல்லாமல் செய்யப்பட்டது.

இதனால் 600 பில்லியன் அல்லது மூன்றில் இரண்டு பங்கு வருமானம் இல்லாமல் போனதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விடயத்தை நாம் தொடர்ச்சியாகக் கூறிவந்தோம். இந்த விடயங்கள் சுயாதீனமாகவே தற்போது அறிக்கையிடப்பட்டுள்ளன.

எமது ஆட்சியில் வெளிநாடுகளிலிருந்து மசகு எண்ணெயை இறக்குமதி செய்வதால் விலைசூத்திரம் ஒன்று இருக்க வேண்டும் என்று நாம் கூறினோம். இதன்போது நுகர்வோர் தெளிவுக்கு வருவர்.

அதாவது சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை அதிகரிக்கும்போதும் குறையும்போது இலங்கையிலும் விலை உயர்வு, விலை குறைப்பு இடம்பெறும் என்பதை நுகர்வோர் புரிந்துகொள்வர்.

அதேபோன்று விஞ்ஞானபூர்வமான விடயங்களையும் உள்ளடக்க வேண்டும். பொருளாதாரம் என்பது விஞ்ஞான ரீதியில் நிர்வகிக்க வேண்டிய ஒன்றாகும். இதனையே நாம் பொருளாதாரம் என்று கூறுகின்றோம் - என்றார். (கே)

# நாணய நிதிய அறிக்கையை நாட்டுக்கு தெரியப்படுத்துக!

## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 28

சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை தொடர்பிலான நிலைப்பாட்டை நிதி அமைச்சர் நாட்டுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்று, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார். இதன்போது தொடர்ந்துரைத்த அவர்,

சர்வதேச நாணயம் நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையானது தற்போது பிரசித்தி பெற்றுள்ளது. இது இன்னமும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. அதற்கான கால அவகாசம் இல்லை. எனினும், அதனை அவர்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். ஏனெனில், பாராளுமன்றத்துக்கே நிதி பலம் இருக்கின்றது.

அரசாங்கம் எவ்வாறான ஒப்பந்தங்களுக்கு செல்லப் போகின்றது. எவ்வாறு சர்வதேச நாணய நிதியத்தின் நிதியை பெறப்போகின்றது என்ற விடயங்களை தெளிவுபடுத்த வேண்டும்.

நாட்டில் நிதி நெருக்கடி ஏற்பட்டமைக்கு நிதி அமைச்சர் மட்டும் பொறுப்புக்கூற முடியாது. ஜனாதிபதி தலைமையிலான ஒட்டுமொத்த அரசாங்கமும் பொறுப்புக் கூற வேண்டும்.

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்படும்போது அதிலிருந்து எவ்வாறு மீள்வது என்பதை அரசாங்கம் தெரியப்படுத்தியிருக்க வேண்டும்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான திட்டமிடல், வேலைத்திட்டங்களை எவற்றையும் முன்வைக்காது கவனத்தில்கொள்ளாது செயல்பட்டதன் காரணமாகவே நாட்டில் இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே, நாட்டின் இன்றைய நிலைமைக்கு ஒட்டு மொத்த அரசாங்கமும் பொறுப்புக் கூற வேண்டும் - என்றார். (கே)

# முன்னாள் பிரதமர் ரணில் மீது 12 விடயங்களில் குற்றப்பத்திரிகை!

கொழும்பு, மார்ச் 28

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக 12 விடயங்களை கொண்ட குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கத்தின் ஊழல் ஒழிப்பு குழு மற்றும் செயலகம் என்பன குறித்து விசாரணை செய்த விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு இந்த குற்றப்பத்திரிகையை முன்வைத்துள்ளது.

அதில், மூன்று குற்றச்சாட்டுகள் தேசிய நிறைவேற்றுக்குழு, ஊழல் ஒழிப்பு குழு மற்றும் ஊழல் ஒழிப்பு செயலகம் என்பன உருவாக்கப்பட்டமை தொடர்பில் சுமத்தப்பட்டுள்ளன.

குறித்த மூன்று குழுக்களை நிறைவேற்றுவதற்கு ஒத்தாசை வழங்கியமை மூலம் முன்னாள் பிரதமர் அரசியலமைப்பை மீறியுள்ளார் என்று ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு குற்றஞ்சாட்டியுள்ளது. (ஐ)

# 11 கோவில்களுக்கு ரூ. 12 இலட்சம் உதவி!

கிளிநொச்சி, மார்ச் 28

கிளிநொச்சியில் உள்ள 11 இந்து ஆலயங்களிற்கு 12 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் ஓர் ஆலயத்திற்கும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் 10 ஆலயங்களிற்கும் இவ்வாறு நிதி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இந்து கலாசார அமைச்சு இந்த நிதியை பகிர்ந்தளித்துள்ளது. இந்த நிதியை பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் நந்தகுமார் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் இணைந்து வழங்கி வைத்தனர். (ஐ)

# தமிழ் தேசிய கட்சிகளுடன் இணைய தமிழர் விடுதலைக் கூட்டணி முடிவு!

மட்டக்களப்பு, மார்ச் 28

தமிழ் தேசியத்தோடு இணைந்து செயல்படும் கட்சிகளுடன் இணைவதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சியின் மத்திய செயல் குழு கூடித் தீர்மானித்துள்ளது. இதன்போது, வேறு பல தீர்மானங்களும் எடுக்கப்பட்டது.

கூட்டணியின் தலைவர் த. இராஜலிங்கம் தலைமையில் மட்டக்களப்பு கல்லடியில் உள்ள அலுவலகத்தில் நடைபெற்ற மத்திய செயல்குழு கூட்டத்திலேயே இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

மத்திய குழு மட்டக்களப்பில் கூடியது



தமிழர் விடுதலை கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளரும் மட்டக்களப்பு மாநகரசபை உறுப் பினருமான வ.குபேரன் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்தகூட்டத்தில் கூட்டணியின் செயலாளர் நாயகம் க.யோக ராஜா, இணைப்பொருளாளர்களான வ. சந்திரன், தி. சம்பந்தன், நிருவாகச் செயலாளர் கௌரிகாந்தன் உள்ளிட்ட வட கிழக்கைச் சேர்ந்த கடசியின் மத்திய குழு உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது கட்சியின் எதிர்கால செயற்பாடுகள், கட்சி முகங்கொடுக்கும் பல்வேறுபட்ட பிரச்னைகள் குறித்து ஆராயப்பட்டதுடன். முக்கிய பல தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

தமிழ்த் தேசியத்தோடு இணைந்து செயல்படும் கட்சிகளுடன் கூட்டி ணைந்து செயல்படுவதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ளல், கட்சியின் யாப்பில் திருத்தங்களை மேற்கொண்டு பொதுச் சபை அங்கீகாரத்துடன் மாற்றி யமைத்தல், ஆனந்தசங்கரியின் தனிப் பட்ட நலனுக்காக கட்சியை பின்னடையச் செய்தமை மட்டுமல்லாது கட்சி உறுப்பினர்களைத் தவறான முறையில் வழி நடத்தியமை மற்றும் கட்சி அலுவலகத்தை தனிப்பட்ட நலன்கருதி பயன்படுத்துகின் றமை போன்ற செயல்பாடுகள் தொடர் பில் ஒழுக்காற்றுக் குழு ஊடாக அவர் மீது சட்ட நடவடிக்கை எடுத்தல், தமிழ்த் தலைவர்களின் உருவச் சிலைகளை நிர் மாணிப்பதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ளல், காணாமல் ஆக்கப் பட்டோரின் உறவுகளுடன் இணைந்து செயல் பட்டு அவர்களுக்கான நீதியைப் பெற் றுக் கொடுப்பதற்காகப் பணியாற்றல், தற்போது மக்களின் அவல நிலையைக் கருத்தில் கொண்டு அதற்கேற்ற நடை முறைகளை முன்னெடுத்தல் போன்ற விடயங்கள் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டன. (ஐ)

# வெங்காய வெடியால் காயம் உணவின்றி தவிக்கும் யானை!

வவுனியா, மார்ச் 28

வவுனியா ஆச்சிபுரம் பகுதியில் பப்பாசி தோட்டத்துக்குள் நுழைந்த யானைக் குட்டி ஒன்று மீண்டும் காட்டுக்கு செல்ல முடியாத நிலையில் தவித்து வருகின்றது.

குறித்த தோட்டத்துக்குள் நுழைந்த 6 வயது மதிக்கத்தக்க யானைக் குட்டி உணவருந்த முடியாத நிலையில், தோட்டத்தில் இருந்து செல்ல முடியாத நிலையில் காணப்பட்டுள்ளது.

இதேவேளை, அந்த யானைக்குட்டியை பார்வையிட சென்ற மக்களை துரத்தி அச்சமடைய வைத்துள்ளது. இதனை தொடர்ந்து பிரதேச வாசிகளால் வவுனியா மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு தகவல் தெரிவித்திருந்தனர்.

குறித்த திணைக்களத்தால் வட மாகாண கால்நடை மருத்துவர் கிரிதரனுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டமையைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு சென்ற வடமாகாண மருத்துவர் கிரிதரன் தலைமையிலான குழுவினர் வெங்காய வெடியை உட்கொண்டதனாலேயே யானை குட்டி உணவருந்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்ததோடு, யானைக்குட்டிக்கான சிகிச்சையையும் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.03.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

*6.00 மணி : பக்திப்பாடல்கள்*
*6.30 மணி : வணக்கம் டான்*
*6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்*
*6.55 மணி : இன்றைய ராசி பலன்*
*7.05 மணி : உளவியல் கருத்து- உளவளத்துணையாளர் நா.நவராஜ்*
*7.15 மணி : கதைவழி அறமொழி வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு*
*7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்*



*7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்*
*8.30 மணி : காலை செய்திகள்*
*9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)*
*10.30 மணி : தொடர் நாடகம்*
*11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு*
*11.30 மணி : மனிதனின் மறுபக்கம்*

பகல்

*12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை நகைச்சுவை நிகழ்ச்சி*
*1.00 மணி : அறிந்தும் அறியாமலும் ( மறு ஒளிபரப்பு )*
*1.30 மணி : சுப்பர் சீன்ஸ்- நாணயம்,தில்லாலங்கடி*
*4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி*



*5.30 மணி : குறுந்திரை நேரம்*
*6.00 மணி : ரெயிலர் ரைம்*
*6.30 மணி : நலந்தானா*



*7.00 மணி : சொற்சமர் -பாடசாலை மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி*




*8.00 மணி : இரவுச் செய்திகள்*
*9.00 மணி : சாட்சியம்*
*9.30 மணி: ஹலோ கோடம்பாக்கம்*
*10.00 மணி : நேருக்கு நேர்*

## DAN COMEDY HD

**காலை**

*6.00 மணி : சிரி சிரி சிரி*
*8.00 மணி : சிரிப்பு சரடிவெடி*
*10.00 மணி : ஒரு பட கொமடி*
*11.00 மணி : சிரிப்போ சிரிப்பு*

**பகல்**

*1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்*
*3.00 மணி : குண்டக்க மண்டக்க*
*5.00 மணி : ஒரு பட கொமடி*
*6.00 மணி : கொமடி கலாட்டா*

**இரவு**

*8.00 மணி : ஒரு படக்கொமடி*
*9.00 மணி : சிரிப்போ சிரிப்பு*
*10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்*

## DAN MUSIC HD

**காலை**

*6.00 மணி : பனிப்பூக்கள்*
*7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்*
*8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்*
*9.00 மணி : மெல்லிசை*
*10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)*

**பகல்**

*12.00 மணி : ராஜா ராணி*
*1.00 மணி : விசை இசை*
*3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)*
*4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)*
*5.00 மணி : இனிது இனிது*
*6.00 மணி : என்றென்றும் இசை*
*7.00 மணி : ஓய்வெடு நிலவே*

**இரவு**

*8.00 மணி : காற்றில் வரும் கீதம்*
*9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்*

## கல்வி tv CHANNEL-1

**காலை**

*5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்*
*6.00 மணி : தரம் 07 - தமிழ்*
*6.45 மணி : தரம் 08 - தமிழ்*
*7.30 மணி : தரம் 09 - கணிதம்*
*8.15 மணி : தரம் 10 - கணிதம்*
*9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்*
*10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி*
*11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்*

**பகல்**

*12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்*
*1.00 மணி : தரம் 07 - தமிழ்*
*2.00 மணி : தரம் 08 - தமிழ்*
*3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்*
*3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்*
*4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்*
*5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்*
*5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்*
*6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்*

**இரவு**

*7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்*

## ஓம் ரிவி

**காலை**

*5.00மணி : சிவாய மந்திரம்*
*6.00 மணி : சுப்ரபாதம்*
*6.30 மணி : சுப்ரபாதம்*
*7.00 மணி : இன்றைய சிந்தனை*
*7.05 மணி : இன்றைய நாள்*
*7.20 மணி : ஈழத்து சித்தர்கள்*
*7.30 மணி : மங்கள இசை*
*8.00 மணி : அருளுரை*
*8.30 மணி : திருவாசகம்*
*9.00 மணி : திருவிழா-01*
*10.00 மணி : பஜனை*
*10.30 மணி : தமிழககோவில் திருவிழா*
*11.00 மணி : பக்திமலர்*

**பகல்**

*12.00 மணி : திரையில் பக்தி*
*12.30 மணி : திருவிழா-02*
*6.00 மணி : கந்தசஷ்டி கவசம்*

**இரவு**

*7.00 மணி : செய்திகள்*
*7.30 மணி : அருளுரை*
*8.00 மணி : திருவிழா-01*

## CHANNEL HOLY MARY

**காலை**

*7.00 மணி : நாளொரு நற்சிந்தனை*
*7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்*
*8.00 மணி : ஜெபமாலை*
*9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)*
*10.00 மணி: அன்னை மரியா*
*10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)*
*11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)*

**பகல்**

*12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)*
*01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)*
*02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)*
*03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)*
*04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)*
*05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)*
*06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)*
*07.00 மணி : ஞானவழி*
*07.30 மணி : அன்பியம்*

## Pirai Television

**காலை**

*6.00 மணி : கிராத்*
*7.00 மணி : இறை சிந்தனை*
*7.30 மணி : இஸ்லாமிய பாடல்*
*8.00 மணி : கலந்துரையாடல்*
*9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்*
*10.00 மணி : மனதோடு பேசலாம்*
*10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்*
*11.00 மணி : சுவனப்பாதை*
*11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்*

**பகல்**

*12.00 மணி : லுகர் அதான்*
*12.30 மணி : இஸ்லாமிய வரலாறு*
*1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்*
*2.00 மணி : கஸீதா*
*2.30 மணி : இறை சிந்தனை*
*3.00 மணி : பாடல்கள்*
*3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்*
*4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்*
*5.00 மணி : இறை தென்றல்*
*6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்*

**இரவு**

*7.00 மணி : பிறை பிரசங்கம்*
*8.00 மணி : இஸ்லாமிய வரலாறு*